பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 21 | 7 - 12 - 94 | புதன்கிழமை | ஓசை 292

## தேசிய அடையாள அட்டை இன்றி பரீட்சை எழுத அனுமதி மறுப்பு

தேசிய அடையாள அட்டை வைத்திருந்த மாணவர்கள் மட்டும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டனர். ஏனைய மாணவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்படவில்லையென தெரியவந்துள்ளது. மேற்படி தேசிய அடையாள அட்டைகள் இன்றி அதற்குப் பதிலாக புகைப்படத்தில் உறுதிப்படுத்திச் சென்ற பல மாணவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்படவில்லை. இச் செயலால் பல மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். இதுபற்றி பரீட்சை எழுதுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்கள் சிலர் தெரிவிக்கையில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு போதிய அவகாசமும் நடைமுறைகளும் இருந்ததாகவும் அதனால் தேசிய அடையாள அட்டை இன்றி பரீட்சை எழுத அனுமதிக்க முடியாதென தலைமை மேற்பார்வையாளர் கூறியதாகத் தெரிவித்தனர். (சி)

# பாப்பரசர் வரவை முன்னிட்டு யுத்த நிறுத்தம்; பாதுகாப்பு உயர்நிலை மாநாட்டில் தீர்மானம்?

## புலிகளுக்கும் இது குறித்து அறிவிக்கப்படலாமாம்

(கொழும்பு)

பாப்பாண்டவர் கொழும்புக்கு வருகை தரும் காலப்பகுதியில் யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்வது தொடர்பாக கொழும்பில் உயர் படைத்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து விரைவில் விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்படலாமெனவும் ஏ. எவ். பி. செய்தியாளரான அமால் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று பி. பி. ஸி. யின் சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி- பாப்பாண்டவரின் வருகையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான உறவுநிலை எவ்வாறுள்ளது?

பதில்- நேற்று உயர் படைத்துறை அதிகாரிகள் கலந்துகொண்ட பாதுகாப்பு மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இம் மாநாட்டில் பாப்பாண்டவர் கொழும்புக்கு வருகைதரும் காலப்பகுதியில் யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டது. பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட இத் தீர்மானம் விடுதலைப்புலிகளுக்கு விரைவில் தெரியப்படுத்தப்பட்டு அதன்மூலம் நல்ல சமிக்கைகிடைக்குமெனவும்எதிர்பார்க்கின்றேன்

கேள்வி இவ்வாறான யுத்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## அநுருத்த தலைமையில் கூடிய உயர்நிலை பாதுகாப்பு மாநாடு

யுத்தநிறுத்த யோசனைகள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் ஆராய்ந்துள்ளனர். உத்தேச யுத்தநிறுத்தம், யாழ். குடாநாட்டு பாதை திறப்பு என்பன தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் நேற்று முன்தினம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

யுத்தநிறுத்தம் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

முப்படை தளபதிகள், பொலிஸ் மாஅதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டன் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

யுத்தநிறுத்த காலத்தில் மேற்கொள்ள வேண்டிய

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமை

## பாப்பரசர் வருகையால் யுத்தம்

## அம்பாறை பொலிஸ் மீது தாக்குதல் சார்ஜன்ட் உட்பட இருவர் பலி

### பொலிசார் ஒருவரை காணவில்லை; ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சென்றல்காம்ப் என்னுமிடத்தில் அமைந்திருந்த காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறன்று இரவு 11.50 மணியளவில் நடத்திய திடீர் தாக்குதலின்போது இரண்டு பொலிசார் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர். இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இத் தாக்குதலின்போது ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி 56 -1 ரகதுப்பாக்கி - 01

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை படகு விபத்து பொதுமக்கள் 11 பேர் பலி

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை ஆற்றில் நேற்று முன்தினம் காலை 9-30 மணியளவில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 11 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது,

17 பேர் படகில் இருந்ததாகவும் அப்போதே படகு கவிழ்ந்தது மாலைவரை ஐவர் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன நால்வர் நீந்தி கரைசேர்ந்துள்ளனர் வருகிறது.

அண்மைய மழையினால் வாழைச்சேனை ஆறு பெருக்கெடுத்துள்ளது. இறந்தவர்களில் ஒன்றரைமாத குழந்தை ஒன்று உட்பட இருவர் பெண்களாவர். இவர்கள் விபரம்; சி. மனோன்மணி (35), அ, வள்ளிப்பிள்ளை (31) சி, ஷர்மிளா (ஒன்றரை வயது), மு. சின்னக்கண்ணன் (50), சு.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சாவற்குடா வாவியில் இரு மீனவர் சுட்டுக்கொலை

சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நால்வர் நீந்தி கரைசேர்ந்துள்ளனர். எண்மர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். எஞ்சிய அறுவரின் சடலங்களும் தேடப்பட்டு

## இரு மீனவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு-சாவற்குடா வாவியில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமைநள்ளிரவு இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாப்பரசர் வருகையால் யுத்தம் முடிவிற்கு வர வாய்ப்புள்ளதாம்

### கத்தோலிக்க திருச்சபை நம்பிக்கை

(கொழும்பு)

கத்தோலிக்க] திருச்சபையின் ஆன்மீக தலைவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் சிறிலங்காவிற்கு மேற்கொள்ளும் பயணம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்திற்கு ஓர் முடிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்பார்க்கின்றது.

இதனை தொடர்ந்து நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு இவ் யுத்த நிறுத்தம் ஓர் உந்து சக்தியாக அமையும் என்றும் அத் திருச்சபை மேலும் நம்புகின்றது. இக்காலப் பகுதியில் நடைபெறும் என தாம் எதிர்பார்க்கும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து நடைபெறவும் அந்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் இதன் மூலம் இப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்.

### பாப்பரசரைத் தரிசிக்கும் யாழ். யாத்திரிகர்கள்

# தற்காலிக பாதையால் செல்வதைவிட கிளாலி ஊடாகச் செல்லமுடியும்

### - அருட்திரு. அலெக்ஸாண்டர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்குவரும் பாப்பரசரைச் சந்திப்பதற்கு யாழ். யாத்திரிகர்கள் நிரந்தரமான பாதை ஒன்றினூடாகவே செல்ல விரும்புகிறார்கள். அரசாங்கம் நிரந்தரமான பாதை ஒன்றை திறப்பதற்கு சம்மதிக்காதுவிடின் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ளும் கிளாலிப் பாதையால் யாத்திரிகர்களால் செல்ல முடியும்.

மேற்கண்டவாறு கத்தோலிக்க திருச்சபையின் துறவறச் சங்கத் தலைவர் அருட்திரு. அலெக்ஸாண்டர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். நேற்று மாலை கொழும்பிற்கு பயணமாவதற்கு முன்னர் அவரைச் சந்தித்த எமது செய்தியாளரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

### பாப்பரசரைத் தரிசிக்கச் செல்வோருக்கு

# புலிகள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாக உறுதி

(யாழ்ப்பாணம்)

பாப்பரசரின் விஜயத்தில் கலந்து கொள்வதற்கென யாழ்ப்பாணத்து மக்கள் கொழும்பு செல்வதற்கு விடுதலைப் புலிகள் தம்மாலான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டு தர சம்மதம் தெரிவித்துள்ளதாக அருட்திரு. அலெக்ஸாண்டர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை சந்தித்த வேளை அருட் திரு. அலெக்ஸாண்டரிடம் விடுதலைப் புலிகள் இதற்கான சம்மதத்தினைத் தெரிவித்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க )

# குடாநாட்டில் புனர்வாழ்வுப் பணிகள் அமுல்படுத்தப்படமாட்டாது

### -தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வுப் பணிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமுலுக்கு வரமாட்டாது - இவ்வாறு வெகுசனத் தொடர்பு உல்லாசப் பயணத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறிசேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மகாநாடொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளோர் 215 முகாம்களில் தங்கியிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றுக்கு வேண்டிய நிவாரணப் பணிகளை வழங்க 17இணைப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை எனக்குத் தெரியாது. வடபகுதிக்கென நியமிக்கப்பட்டுள்ள இணைப்பதிகாரி யாழ். குடாநாட்டிலுள்ள இடம் பெயர்ந்த மக்களை கவனிக்க மாட்டார் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள அகதி முகாம்களையே கவனிப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் உலக வங்கிக் குழு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை முழுமையாக புனரமைப்புச் செய்வதற்கான உலக வங்கியின் வேலைத் திட்டக்குழு கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்துள்ளது.

இக் குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் புனர்வாழ்வு வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டு அது தொடர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# ராணுவத்தின் ஊடுருவல் திட்டத்திற்கு அரசாங்கம்தடைபோடுவதாகவில்லை

### சந்திரிகா அரசு குறித்து 'இன்சைட் றிப்போட்'

யாழ் குடாவை சுற்றிவளைத்து அதனுள் இராணுவம் ஊடுருவும் திட்டத்திற்கு சந்திரிகா அரசு முட்டுக் கட்டை போடுவதாக இல்லை. குடாநாட்டிற்கான தரைப்பாதை திறப்பதில் புதிய அரசு ஆர்வம் காட்டாமைக்கு இதுவே காரணம் என 'இன்சைட் றிப்போட்' எனும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஆங்கில இதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், வடபகுதி பெருநிலப் பரப்புக்கும் இடையிலான தரைவழிப்பாதை திறக்கப்படுவது பற்றி விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான முதற்கட்ட பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சங்குப்பிட்டி கடநீரேரிப் பாதையை பொதுமக்களின் பாவ

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# ராணுவத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு மக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறானது

### பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா தனது தேர்தல்கால உரைகளின்போது தமிழ் பிரிவினைவாதப் போரினால்நாட்டின்வளங்களும் மனிதஉயிர்களும் அநியாயமாக விரயமாவதாகக் கூறியிருந்தார். ஆனால் பதவிக்கு வந்தபின் அவரின் அரசு சமர்ப்பித்த இடைக்கால வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கே அதிகளவு நிதியை ஒதுக்கியுள்ளார்.

இது சமாதானத்திற்காக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளித்த தென் பகுதியினரின் எதிர்பார்ப்பிற்கு மாறாக உள்ளது. இவ்வாறு தென்னிலங்கை

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மில்க்வைற் சலவைத்தூள்**

சக்தி கொண்ட நுரைவளம் துணியிலிருந்து அழுக்கை முற்றாக அகற்றுகிறது. பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது. மேலாக சலவையைத் துரிதமாக்கி உதவுகிறது, மில்க்வைற் சலவைத்தூள். 25 சலவைத்தூள் வெற்றுப் பக்கற்றுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு. ''மில்க்வைற்'' (சி-10853)

**யாழ் கலட்டி கற்பக விநாயகர் ஆலயம்**

மேற்படி ஆலய விநாயகர் கதை பூர்த்தியும் இலட்சார்ச்சனை இலட்ச ஹோமம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி கணபதி ஹோமம், அபிஷேகம், தீபாராதனை இலட்சார்ச்சனை பூர்த்தியுடன் மாலை 3 மணிக்கு விசேட பூசையும் 4 மணிக்கு சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும். (சி/10857)

**புகைப்படங்கள்**

வட இலங்கை நுண்கலை மன்ற சான்றிதழ் வழங்கல் தொடர்பான புகைப்படங்களை திங்கள், புதன், வெள்ளிகளில் பெற்றுக்கொள்ளவும். கலையகம் இல. 6, டென்ரிக் கோஸ் லேன் கண்டி வீதி கச்சேரியடி, (10318)

**கிரிக்கெட் சபை தலைவராக துலிப் மெண்டிஸ்**

சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவராக துலிப் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சபையில்-றோய்டயஸ், ரஞ்சன் மடுகல்ல, சிதத் வெத்தமுனி ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

# சந்திரிகாவின் நடவடிக்கைகளில் பிரதமர் சிறிமாவோ அதிருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதியின் பத்திரிகை தொடர்பு செயலாளராக திருமதி பத்மா மகாராஜாவும் நடிகர் சனத் குணதிலக்கவும் நியமிக்கப்பட்டமை தொடர்பாக பிரதமர் திருமதி சிறிமாவோ அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந் நியமனத்தை பெறுவதற்கான இவர்களது தகுதிப்பாடு குறித்து பிரதமர் திருமதி சிறிமாவோ அமைச்சரவைப் பேச்சாளரும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான தர்மசிறி சேனநாயக்காவிடம் கேள்வி எழுப்பி இருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது. அத்துடன் முக்கிய முடிவுகளில் இவர்களது செல்வாக்கிற்கு ஜனாதிபதி உட்பட்டுவிடக் கூடாது என பிரதமர் திருமதி சிறிமாவோ ஆலோசனை கூறியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை அமைச்சரவையில் தொண்டமான் இணைக்கப்பட்டமை தொடர்பாகவும் திருமதி சிறிமாவோ அதிருப்தி உடையவராக காணப்படுவதாகவும், முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசனை கலக்கப்படாமை பற்றி கவலை உடையவராக காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவற்றின் வெளிப்பாடாகவே தமது மகன் அநுராவை மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைக்க திருமதி சிறிமாவோ விரும்புவதாகவும் தெரியவருகிறது.

# 77 யுகத்தை நோக்கி அரசு நாட்டை நகர்த்தி செல்கிறது

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொ. ஐ. முன்னணி அரசு பதவ் ஏற்ற மூன்று மாதத்தில் பொருட்களிற்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் பாவனையாளர் மிகவும் கஷ்ரப்படுவதாகவும் மீண்டும் பழைய 77 யுகத்திற்கு மக்களை இந்த அரசு இட்டுச் செல்வதாக ஐ.தே. கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற மக்கள் சந்திப்புக்களின் போது இக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டில் பங்குச் சந்தையில் விலைகள் குறைவடைந்து வருவதாகவும் இதனால் வர்த்தகர்கள் பாரிய நட்டமடைந்து வருவதாகவும் மக்கள் கஷ்ரங்களை எதிர் நோக்குவதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெற்றிடமான எம்.பி. பதவிக்கு என்னையும் கருத்திற் கொள்க

### ஐ.தே.கவிடம் விமல் விக்கிரமசிங்கா கோரிக்கை

[கொழும்பு]

ஜி. எம். பிரேமச்சந்திர, காமினி விஜயசேகர ஆகியோரது இடத்தை தேசியப் பட்டியலில்இருந்து பாராளுமன்ற ஆசனத்தை ஐ. தே. கட்சி நிரப்பும் போது தனது பெயரையும் கருத்தில் கொள்ளுமாறு விமல் விக்கிரமசிங்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இவர் மேற்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

காமினி திசாநாயக்கா கொலை செய்யப்பட்ட குண்டு வெடிப்பில் ஜி. எம். பிரேமச்சந்திரவும், காமினி விஜயசேகரவும் மரணமானது தெரிந்ததே.

இவர்களினால் ஏற்பட்ட பாராளுமன்ற வெற்றிடத்தையே ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் மூலம் நிரப்ப உள்ளது.

இவ்வேளையில் விமல் விக்கிரமசிங்கா தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

## பெண்குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியாவினால் பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. கொட்டடிப் பகுதியில் தங்கியிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த அன்ரன் நிஷாந்தினி என்ற ஏழுமாதக் குழந்தையே உயிரிழந்ததாகும்.

மேற்படி நோயினால் பீடிக்கப்பட்ட இக்குழந்தை கடந்த பதினைந்து தினங்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்து கடந்ததிங்கட்கிழமை காலை உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (22)

## ஆலய மண்டபத்தில் வயோதிபர்சடலம்

(வடமராட்சி)

பொலிகண்டி கந்தவன ஆலய மண்டபத்தில் வயோதிபர் ஒருவரின் சடலம் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் ச. சுப்பிரமணிய சர்மாவினால்காணப்பட்டுவல்வெட்டித்துறை காவல் துறையினரால் மீட்கப்பட்டது

தும்பளையைச் சேர்ந்த சி.கதிர்காமத்தம்பி[64] என்பவரது சடலமென பின்னர் அடையாளம் காணப்பட்டது சடலத்தைகாவல் துறையினர் உரியவரிடம் ஒப்படைத்தனர். [யோ]

## முக்கிய அறிவித்தல்

சினிமா நடிகர், நடிகைகளின் படங்களை கொண்ட சிறிய, பெரிய நாட்காட்டி (கலண்டர்) மற்றும் வாழ்த்து மடல்கள் அனைத்தும் இன்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட படங்கள் வணிக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அனைத்து படங்களும் உடனடியாக அகற்றப் படவேண்டும் என அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி - செயலாளர் -
யாழ்மாவட்ட வணிக கழகங்களின் இணையம்,
யாழ்ப்பாணம் 7.12.94.

(10320)

## நினைவு கூருகின்றோம்...

### 07.12.1994

1988 -ம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறை - மாதனைப்பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். அசோக்** (சிவகுரு சிறிதரன் - கட்டுவளை, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

1990 - ம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கடாபி** (தங்கவேல் பாபு - சிவகுமரன் வீதி, அரியாலை - யாழ்)

திருமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**நாயன் - நாயர்** (செல்லத்துரை துரைராசா-காட்டு குளம், திரியாய் - திருமலை)

1991-ம் ஆண்டு அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

வடமராட்சித் தாக்குதல் படைப்பிரிவின் தளபதியான,

**மேஜர் இளங்கோ** (வல்லிபுரம் மன்மதநாதன் -கப்புது, கரவெட்டி - யாழ்)

**2-ம் லெப். சின்னத்தம்பி** (கணபதிப்பிள்ளை சண்முகம் - புலோலி மேற்கு - பருத்தித்துறை)

பலாலி முகாமிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை இடைக்காட்டுப் பகுதியில் வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**அருளாளன் - அருளானந்தன்** (இரத்தினம் உதயகுமார் (சீலன்) கெருடாவில் தெற்கு - தொண்டமனாறு - யாழ்)

துணைப்படை வீரரான,

**ரவி** (சோ. செல்வேந்திரன் - பொலிகண்டி -வல்வெட்டித்துறை)

1992 -ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**குயிலன்** (கந்தசாமி சுதாகரன் -வசாவிளான் -யாழ்)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



இளங்குமரனாக
10-04-1985

இறைஅமரனாக
18-11-1993

திதி:-_07-12-1994

**செல்வன் நல்லையா இளங்குமரன்**
(கண்ணன்)

பாலகனாய் உன்னைப் பறிகொடுக்கவென்றோ-நாம்
பாசமழை பொழிந்து பேணிவளர்த்தோமையா
ஆலய வீதியிலே காலனாய் வந்து உனைக்
கூலிப்படைதனின் குண்டுதான் துளைத்ததுவோ.
செய்தி அறிந்தன்று நாம் துடிதுடித்த போதினிலும்
தேதிவந்து விட்டதென்று பாதியிலே உன்கதையை
பறித்தெடுத்துச் சென்று எமைப்பரிதவிக்க விட்டானே
பாவி.

# யாழ்ப்பாண மாநகரசபை

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 1995

1995 ஆம் ஆண்டிற்கு பின்வரும் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகரசபையுடன் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள். ஒப்பந்தகாரர்கள். உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பதிவுக் கட்டணத்திற்கான காசோலையை அல்லது காசுக்கட்டளையை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து 21.12.1994 ஆம் திகதிக்கு முன்னர்

லது காசுக்கட்டளையை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெய ருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து 21.12.1994 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் -1995' எனக் குறிப் பிடுதல் வேண்டும்:

| பொருட்களின் விபரம் | | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. எழுது கருவிகள், காகிதாதிகள் | - | 100.00 |
| 02. அச்சிட்ட படிவங்கள், பத்திரங்கள் | - | 100.00 |
| 03. சௌக்கிய சேவைப் பொருட்கள் | - | 100.00 |
| 04. பிரசவ விடுதிக்கு வெளிநாட்டு மருந்துகள் | - | 100.00 |
| 05. மரப்பலகைகள் | - | 100.00 |
| 06. தண்ணீர் மானிகள் | - | 100.00 |
| 07. பி. வி. சி. குழாய் பொருத்திகள் | - | 100.00 |
| 08. ஜி. ஐ. குழாய்கள், பொருத்திகள் | - | 100.00 |
| 09. இரும்புக் கம்பிகள் | - | 100.00 |
| 10. இரும்புச் சாமான்கள் | - | 100.00 |
| 11. பெயின்ற் வகைகள் | - | 100.00 |
| 12. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | - | 100.00 |
| 13. மின்சாரப் பொருட்கள் | - | 1000.00 |
| 14. ஆயுர்வேத மருந்து வகைகள் | - | 100.00 |
| 15. சேர்லவுடைத் துணிகள், மழை அங்கிகள் முதலியன | - | 100.00 |
| 16. வீதிப் பராமரிப்பு வேலைப் பொருட்கள் (கல், மணல்) | - | 1000.00 |
| 17. வீதிப் பராமரிப்பு வேலைப் பொருட்கள் (பொக்கமட்டை) | - | 100.00 |
| 18. வீதி வேலைகளுக்கான டிராக்டர்களைப் பதிவு செய்தல் | - | 1500.00 |
| 19. இயந்திர உபகரணம் / உதிரிப்பாகங்கள் | - | 1000.00 |
| 20. ஏற்றியிறக்கும் சேவை | - | 1000.00 |
| 21. தட்டெழுத்துப் பொறிகள், கூட்டல் இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள் பழுதுபார்த்தல் | - | 100.00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படுமிடத்து வேறு வழங்குநரிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை இம்மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும் போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் கோரப்பட்ட விபரங்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாக இருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

வே. பொ. பாலசிங்கம்

மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 05-12-1994.

(சி/10850)

---

பாவி.

எம் அருமை இளங்குமரன் இறைகுமரன் ஆனசெய்தி
நேற்றென்று நாமிருக்க - இன்று
ஆண்டொன்று சென்றதென்றுகாலம்தான்கூறுதையா.

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

குடமியன்
வரணி

(10305)

---

அணைந்த தீபத்தின்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06-09-1939

மறைவு
18-11-1993

திருமதி
## தெய்வானை இளையதம்பி
(சின்னமணி)

திதி. 7 - 12 - 94

ஆண்டொன்று போனாலும் அன்னையே!
எண்ணத்தில் உம் நினைவு மாறாது -மண்ணில்
அழுவதால் தீராத, ஆறாத சோகமிது நாம்
வாழும் வரையில் வாழ்வீர்கள் தாயே

பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், மகன், சகோதரர்,
பெறாமக்கள், உறவினர்கள்.

திக்கம்,
அல்வாய்.

(9944)

---

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி- 10851)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தசாமிஐயர் இராசம்மா

திதி:- 07.12-1994

உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பெரியகேணிப் பிள்ளையார் கோவிலடி,
எழுதுமட்டுவாள்.

(10316)

# விஞ்ஞானம் மாணவர் அரங்கு

## பகுதி I


பின்வரும் வினாக்களிற்கு தரப்பட்ட விடைகளில் மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

1. எதன் அலகு N ஆக கொள்ளப்படும்?
   1) திணிவு 2) நிறை 3) அடர்த்தி
   4) சாரடர்த்தி
2. பின்வரும் தரவுகளில் யாவும் சரியாக அமைந்த கூட்டம்.

| | கணியம் | அலகு | கணியவகை |
|---|---|---|---|
| 1) | திணிவு | Kg | எண்கணியம் |
| 2) | விசை | N | எண்கணியம் |
| 3) | வேகம் | $MS^{-2}$ | காவிக்கணியம் |
| 4) | கதி | $MS^{-1}$ | காவிக்கணியம் |

3. பின்வருவனவற்றில் அலகு இல்லாத கணியங்களின் கூட்டம்
   1) விசை, சாரடத்தி, பொறிமுறைநயம்
   2) வேகவிகிதம், சாரடர்த்தி, பொறிமுறைநயம்
   3) சாரடர்த்தி, அமுக்கம், வேகவிகிதம்
   4) சாரடர்த்தி, கனவளவு, அடர்த்தி
4. ஒரேவகையானகணியங்களைக் கொண்ட கூட்டம்
   1) திணிவு, வேகம், விசை
   2) விசை, கதி, தூரம்
   3) வேகம், இடப்பெயர்ச்சி, விசை
   4) கதி, விசை, ஆர்முடுகல்
5. அடர்த்தி, அமுக்கம், வேகம் என்பவற்றின் அலகுகளை முறையே கொண்ட கூட்டம்
   1) $MS^{-1}$, $NM^{-2}$, $MS^{-1}$
   2) $Kgm^{-2}$, $Nm^{-3}$, $MS^{-1}$
   3) $Kgm^{-3}$, $Nm^{-2}$, $MS^{-1}$
   4) $Kgm^{-3}$, $Nm^{-2}$, $MS^{-2}$
6. பகல் வேளையில் இலையில் உள்ள எக்கலத்தில் இருந்து ஒட்சிசன் வெளியேறுவதில்லை
   1) காவற்கலம் 2) மேற்றோல்கலம்
   3) வேலிக்காற் புடைக்கல விழையக்கலம்
   4) கடற்பஞ்சு புடைக்கலவிழையம்
7. ஓர் அளவுச் சாடியினுள் $80Cm^3$ நீர் உண்டு இதனுள் $4g/Cm^3$ அடர்த்தியுள்ள திண்மத்தின் 20g ஐ இட்டால் சாடியின் நீர்மட்டத்தின் அளவு
   1) $80Cm^3$ 2) $85Cm^3$
   3) $20Cm^3$ 4) $100Cm^3$
8. பின்வரும் பதார்த்தங்களில் வெப்பத்தால் பிரிகை அடைவது
   1) CaO 2) $Na_2CO_3$ 3 $KClO_3$ 4) $K_2CO_3$
9. பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
   கூற்று A: வெப்பநிலை கூடினால் தாவரங்களில் ஆவியீர்ப்பு வீதம் கூடும்
   கூற்று B: ஈரப்பதன் கூடினால் தாவரங்களில் ஆவியீர்ப்பு வீதம் கூடும்
   1) A மட்டும் சரி 2) B மட்டும் சரி
   3) A, யும் Bயும் சரி 4) இரண்டும் பிழை
10. வெப்பத்தால் பின்வரும் எப் பொருளில் அதிக அளவு விரிவு ஏற்படும்.
    1) வளி 2) இரசம் 3) இரும்பு 4) நீர்
11. பின்வருவனவற்றில் எது ஒரு மீளும் தாக்கமல்ல?
    1) $CaCo_3 \xrightarrow{\Delta} CaO + CO_2$
    2) $Hg + O_2 \xrightarrow{\Delta} HgO$
    3) $Mg + O_2 \xrightarrow{\Delta} MgO$


   1) A ஒருவித்திலை தாவர தண்டு B ஒரு வித்திலை தாவர வேர்
   2) A இருவித்திலை தாவர தண்டு B ஒரு வித்திலை தாவர வேர்
   3) A ஒருவித்திலை தாவர வேர் B ஒரு வித்திலை தாவர தண்டு
   4) A இருவித்திலை தாவர தண்டு B இரு வித்திலை தாவர வேர்
13. உராய்வு பற்றிய கூற்றுக்களில் தவறானது
    1) பொருள் இயங்கும் திசைக்கு எதிராக தொழிற்படும்
    2) பொருளின் நிறையில் தங்கியிருக்கும்
    3) விசையைக் கூட்ட உராய்வு விசையும் தன்னை அதிகரிக்கும்
    4) தொடுபரப்பின் தன்மையில் தங்கியிருப்பதில்லை
14. அணு ஆரை அதிகரிப்பதனால் அதிகரிக்கும் இயல்பு
    1) மின்னேர்த்தன்மை 2) அயனாக்கற்சக்தி
    3) கருக்கவர்ச்சிவிசை
    4) மேற்கூறிய எதுவுமல்ல
15. சக்திக்கு பெருமளவு பயன்படும் உணவுகளைக் கொண்ட கூட்டம்
    1) பருப்பு, அரிசி, பால்
    2) சீனி, அரிசி, எள்ளு
    3) பாண், பருப்பு, மீன்
    4) நெத்தலி, முட்டை, தேங்காய்
16. பின்வரும் மூலகங்களில் எது $CuSO_4$ கரைசலில் இடும்போது குறைந்த நேரத்தில் நிறமாற்றத்தை ஏற்படுத்தும்
    1) Ag 2) Zn 3) Mg 4) Fe
17. தாவரத்தின் பக்கவளர்ச்சிக்கு காரணமானபகுதி
    1) காழ் 2) மாறிழையம்
    3) உரியம் 4) மேற்பட்டை



18. இச்சுற்றின் சமானத்தடை
    1) $\frac{2}{3}\Omega$ 2) $3\Omega$ 3) $1\frac{2}{3}\Omega$ 4) $\frac{1}{3}\Omega$
19. உணவுடன் அதிக நீர் பருகினால் சமிபாடு விரைவாக நடைபெறுவதில்லை. இங்கு தாக்கவீதத்தை பாதிக்கும் காரணி
    1) வெப்பம் 2) செறிவு
    3) ஊக்கி 4) பௌதிக நிலை
20. மூல் என்பது பற்றி விளக்குவது
    1) $6.023 \times 10^{23}$ அணுக்களை அல்ல மூலக்கூறுகளைக் கொண்ட பதார்த்தம் ஒரு மூலாகும்
    2) ஒரு பதார்த்தத்தின் கிராம் அணு நிறை ஒரு மூலாகும்
    3) ஒரு பதார்த்தத்தின் கிராம் மூலக்கூற்று நிறை ஒரு மூலாகும்
    4) மேற்கூறிய யாவும் விளக்குகின்றன.
21. திண்ம ஊடகத்திலும், வெற்றிடத்தினூடாகவும் வெப்பம் செல்லும் முறைகள் முறையே
    1) கடத்தல் மேற்காவுகை

    2) ஈரலிப்பாகக் காணப்படல்
    3) மெல்லிய சுவர்கள் உடையதாக இருத்தல்
    4) மேற்கூறிய யாவும்
21. ஐதான $HNO_3$ உடன் ஐதரசனைக் கொடுக்கக் கூடிய மூலகம்
    1) Cu 2) Mg 3) Ag 4) Al
25. 0.2 உராய்வுக்குணகமுடைய தளத்தில் உள்ள பொருள் ஒன்று 30 N விசையால் மட்டு மட்டாக இழுக்கப்படுகிறது. இப்பொருளின் அரைப்பங்கு நிறையுடைய பொருளை வைத்து இழுக்கத் தேவையான விசை
    1) 30N 2) 15N 3) 60N 4) 90N
26. பின்வரும் எந்தக் குருதிக் கலனில் வெல்லம் அமினோ அமிலத்தின் செறிவு கூடவாக காணப்படும்?
    1) சிறுநீரகநாடி 2) ஈரல்நாளம்
    3) ஈரல்வாயிநாளம் 4) சுவாசப்பை நாடி
27. தாவரங்களில் ஆண்புணரிக் கலமாகத் தொழிற்படுவது
    1) கேசரம் 2) மகரந்தக்கூடு
    3) மகரந்தமணி 4) சூலகம்
28. மில்ரன் தயாரிப்பிற்கு பயன்படும் பதார்த்தங்கள்
    1) $NaCl + Cl_2$ 2) $NaoH + Cl_2$
    3) $Ca(OH)_2 + Cl_2$ 4) $NaOH + H_2$
29. பொட்டாசியம் குளோரேற்று மூலக்கூறில் காணப்படும் மூலகங்களின் எண்ணிக்கை
    1) 3 2) 5 3) 2 4) $6.023 \times 10^{23}$

30 - 32-ம் வினாவரை இப்படத்தைப் பயன்படுத்தி விடை தருக.




30. இங்குகாட்டப்பட்டவிசைத் தொகுதியானது ஒரு
    1) இணைவிசை
    2) நிகர்த்த சமாந்தர விசை
    3) சமனான நிகர்த்த சமாந்தர விசை
    4) சமனான விசை இணைகள்
31. இதன் விளையுள் விசையும் அது தொழிற்படும் இடமும் முறையே
    1) 12N வடக்காக AB ற்கு நடுப்புள்ளியில்
    2) 24N வடக்காக AB ற்கு நடுப்புள்ளியில்
    3) 12N தெற்காக AB ற்கு நடுப்புள்ளியில்
    4) 24N தெற்காக AB ற்கு நடுப்புள்ளியில்
32. மேற்குறித்த விசைத் தொகுதியை சமநிலைப்படுத்த பிரயோகிக்க வேண்டிய விசை
    1) 12N வடக்கு 2) 24N வடக்கு
    3) 12N தெற்கு 4) 24N தெற்கு
33. கலன்கோளத்தில் உள்ள குருதியில் இருந்து போமனின் உறைக்குள் வடிகட்டப்படாத பதார்த்தம்
    1) வெல்லமும் நீரும்
    2) வெல்லமும் குருதிக்கலங்களும்
    3) புரதமும் குருதிக் கலங்களும்

38. ஒரு பொறியின் வேக விகிதம் 3 என்பதில் இருந்து நீர் விளங்குவது.
    1) சுமை ஒரு மீற்றர் செல்ல எத்தனம் ஒரு மீற்றர் செல்லும்
    2) சுமை 3 மீற்றர் செல்ல எத்தனம் ஒரு மீற்றர் செல்லும்
    3) சுமை 1 மீற்றர் செல்ல எத்தனம் 3 மீற்றர் செல்லும்
    4) சுமை 3 மீற்றர் செல்ல எத்தனம் 3 மீற்றர் செல்லும்
39. ஒரே மூலகங்களை கொண்ட எரி பொருட்களின் கூட்டம்.
    1) மண்ணெய், விறகு, உயிர்வாயு
    2) டீசல் மண்ணெய், விறகு
    3) உயிர்வாயு, நிலக்கரி, மண்ணெய்
    4) உயிர்வாயு, பெற்றோல், மெழுகு
40. $40°C$ வெப்பநிலையை கெல்வினில் குறிப்பின்.
    1) 104 K 2) OK 3) 313° 4) 313K
41. பின்வருவனவற்றில் அணு ஆரை கூடிய மூலகம் எது?
    1) $^{24}_{12}A$ 2) $^{40}_{20}B$ 3) $^{26}_{13}C$ 4) $^{35}_{17}D$
42. பினோத்தலீனுடன் நிறமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பொருள்.
    1) நீர் 2) எரிசோடா
    3) Hcl 4) Nacl கரைசல்

ச. அருள்நேசன்


43. பின்வரும் எச் சோடியில் இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம் நடைபெறும்?
    1) $CuSo_4 + Zn$
    2) $Hcl + mg$
    3) $pb(No_3)_2 + Nacl$
    4) Hgo வை வெப்பப்படுத்தல்
44. பின்வருவனவற்றில் வெப்பப்படுத்தும் போது பிரிகை அடையாது நிறமாற்றத்துக்குள்ளாகும் பொருள்
    1) $Na_2o$ 2) Hgo 3) Zno 4) Mgo
45. எந் நைத்திரேற்றை சூடாக்க $No_2$ வெளிவராது?
    1) $Zn(No_3)_2$ 2) $NaNo_3$
    3) $Pb(No_3)_2$ 4) $Mg(No_3)_2$
46. உடற்சமநிலையை பேண உதவும் மூளையின் பகுதி
    1) மூளையம் 2) மூளி
    3) நீள்வளைய மைய விழையம் 4) பரியகம்
47. மூளையின் எப்பகுதி தாக்கப்பட்டால் உணவை விழுங்குதல் தடைப்படலாம்?
    1) மூளையம் 2) மூளி
    3) நீள்வளைய மையவிழையம் 4) எதுவுமல்ல
48. இனப்பெருக்கத் தொகுதியில் காணப்படும் அகஞ்சுரக்கும் சுரப்பி?
    1) கபச்சுரப்பி
    2) இலங்ககான் சிறுதீவுக்கலம்
    3) சனனி ஓமோன்சுரப்பி
    4) அதிரீனல் சுரப்பி

2) $Hg + O_2 \xrightarrow{\Delta} HgO$

3) $Mg + O_2 \xrightarrow{\Delta} MgO$

4) $Fe + H_2O(g) \xrightarrow{\Delta} Fe_3O_4 + H_2$

12.




A, B என்ற அமைப்புக்கள் முறையே எவற்றின் உடையது

21. திண்ம ஊடகத்திலும், வெற்றிடத்தினூடாகவும் வெப்பம் செல்லும் முறைகள் முறையே
1) கடத்தல் மேற்காவுகை
2) மேற்காவுகை கதிர்வீசல்
3) கடத்தல் கதிர்வீசல்
4) இரண்டிலும் மேற்காவுகை

22. ஒரு வில்லையினால் உருச்சிறுத்த மெய்விம்பம் தோற்றுவிக்கப்பட்டது எனில் வில்லையும் பொருள் வைக்கப்பட்ட இடமும் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது
a) குழிவு வில்லை பொருள் 2F ற்கு அப்பால்
b) குவிவு வில்லை பொருள் 2F ற்கு அப்பால்
c) குழிவு வில்லை பொருள் முடிவிலியில்
d) குவிவு வில்லை பொருள் முடிவிலியில்
1) a ம், bம் 2) bம் dம்
3) aம் cம் 4) aம் dம்

23. சுவாச மேற்பரப்பு ஒன்றிற்கு இருக்க வேண்டிய இசைவாக்கம்
1) ஊடகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளல்

1) வெல்லமும் நீரும்
2) வெல்லமும் குருதிக்கலங்களும்
3) புரதமும் குருதிக் கலங்களும்
4) வெல்லமும் புரதமும்

34. குருதியில் வெல்லமட்டம் அதிகரிப்புக்கு எச்சுரப்பு குறைவது காரணமாகும்?
1) தைரொட்சின் 2) இன்சுலின்
3) அதிரீனலின் 4) தயலீன்

35. பல தூண்டல்களை உணரக் கூடிய அங்கம்.
1) கண் 2) காது 3) தோல் 4) மூக்கு

36. மனிதனில் விந்துக்கலம் தோற்றுவிக்கப்படுவது
1) ஆண் இனப் பெருக்க தொகுதியில்
2) விதையில்
3) சுக்கில சிறு குழாயில்
4) விதை மேற்திணிவில்

37. உலர் மின்கலமொன்றில் பயன்படுத்தப்படாத பதார்த்தம்.
1) $NH_4Cl$ 2) $Mno_2$ 3) Cu 4) C

4) அதிரீனல் சுரப்பி

## பகுதி 1 இன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1-2 | 13-4 | 25-2 | 37-3 |
| 2-1 | 14-1 | 26-3 | 38-3 |
| 3-2 | 15-3 | 27-3 | 39-4 |
| 4-3 | 16-3 | 28-2 | 40-3 |
| 5-3 | 17-2 | 29-1 | 41-2 |
| 6-2 | 18-3 | 30-3 | 42-2 |
| 7-2 | 19-2 | 31-2 | 43-3 |
| 8-3 | 20-4 | 32-4 | 44-3 |
| 9-1 | 21-3 | 33-3 | 45-2 |
| 10-1 | 22-2 | 34-2 | 46-2 |
| 11-3 | 23-4 | 35-3 | 47-3 |
| 12-2 | 24-2 | 36-3 | 48-3 |

# பகுதி II

1. நாம் வாழும் சூழல் உயிர்க் கூறுகளாலும் பௌதிக கூறுகளாலும் ஆக்கப்பட்டதாகும். இச்சூழலில் சக்தி தொகுக்கப்படும் செயற்பாடும் சக்தியை வெளிவிடும் செயற்பாடும் நடைபெறுகிறது. மேலும் இன்றைய அறிவியல் வளர்ச்சியால் விஞ்ஞான தொழில் நுட்ப விருத்தியால் பௌதிக சூழல் பெரிதும் மாற்றத்திற்குள்ளாகிறது. இம்மாற்றம் உயிர்க்கூறுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவ்விளைவுகளுக்கு தகுந்த பரிகாரம் காணப்படாவிடில் மனித இனம் அழிவில் இருந்து தப்புவது கடினமாகும்.

1) எமது பௌதிக சூழலை ஆக்கும் கூறுகள் என எவற்றைக் கருதுகிறீர்?
2) தொழில் நுட்ப வளர்ச்சியால் பௌதிக சூழலில் எத்தகைய மாற்றம் ஏற்படுகிறது என சுருக்கமாக தருக?
3) பௌதிக சூழலில் ஏற்படும் மாற்றத்தால் உயிர்ச் சூழலில் தாக்கம் உண்டாக்கப்படுகிறது என்னும் கூற்றால் நாம் எதை உணரமுடிகிறது?
4) உயிர்க்கூறுகளில் நடைபெறும் சக்தி தொகுக்கும் செயற்பாட்டையும் சக்தி வெளிவிடும் செயற்பாட்டையும் தருக
5) எவ்வகையான அங்கிகளில் சக்தி தொகுக்கப்படும்? இவை உணவுச் சங்கிலியில் எங்கு காணப்படும்?
6) பௌதிக சூழலில் உள்ள N ஆனது உமது உடலை வந்தடையும் முறையை சுருக்கமாக தருக?
7) மனித இனம் அழிவதை தடுக்க தகுந்த பரிகாரம் காணப்படவேண்டும் என்னும் கூற்றை காரணம் தந்து ஆராய்க.
8) உயிர்ச் சூழலில் உள்ள கூறுகளில் அதிக எண்ணிக்கையில் எவ்வங்கத்தவர் காணப்படுவர் என கூறுக?
9) பௌதிக சூழலில் இருந்து பெற்ற கூறுகளை மீண்டும் பௌதிக சூழலை அடைய செய்யும் அங்கிகள் எவ்வாறு அழைக்கப்படும்?
10. மனிதனது எச் செயற்பாடுகளால் (9) இல் கூறும் செயல்முறை தடுக்கப்படுகிறது என ஆராய்க?


2. (அ)

| மூலகம் | ஆவர்த்தனம் | நியூத். எண். | குறிப்பு |
|---|---|---|---|
| A | 3 | 13 | 3+ என்னும் அயனைக் கொடுக்கும் |
| B | 2 | 6 | பங்கீட்டுவலுச் சேர்வையை கொடுக்கும் |
| C | 4 | 19 | காரக்கூட்ட மூலகமாகும் |
| D | 3 | 18 | CD என்ற ஏலைட்டை தோற்றுவிக்கும் |
| E | 1 | 2 | தாக்கத்தில் ஈடுபடாது |
| F | 3 | 19 | ஒரு வலுவளவுடைய எதிர் அயனைக் கொடுக்கும் |

இவ்வட்டவணை தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக
1) A எக்கூட்டத்தில் காணப்படும்?
2) C யின் அணு எண் யாது?
3). ஒரே கூட்டத்தில் காணப்படும் மூலகங்கள் எவை?
4) B யின் அணுத்திணிவு யாது?
5) A, D என்பவற்றில் அணு ஆரை கூடியது எது?
6) தாக்கத்தில் ஈடுபட்டும் அயனைக் கொடுக்காதது எது?
7) சமதானிகளாக இருக்கக்கூடியவை எவை?
8) அனேகமாக சுவாலைப் பரிசோதனையில் சுவாலைக்கு நிறத்தைக் கொடுக்கும் மூலகம் எது?
9) ஓரணு வாயுவாகக் காணப்படக்கூடியது எது?
10. Bயின் $6.023 \times 10^{23}$ அணுக்களின் திணிவுயாது?


(ஆ) H = 1, C = 12, O 16, N = 14, Na=23, Mg = 24, Ca = 40, S = 32, Cl = 35.5 எனக் கொண்டுபின்வரும் வினாக்களுக்கு விடைதருக? யூரியாவின் மூலக் கூற்று சூத்திரம் $CO(NH_2)_2$ ஆகும்
1) இதன் மூலக்கூற்று நிறை யாது?
2) இதில் காணப்படும் நைதரசனின் சத வீதம் எவ்வளவு?
3) இதன் 2.5 மூலின் நிறை யாது?
4) 30g யூரியாவிலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் காண்க?
5) 90g யூரியா எத்தனை மூல்
6) 500ml யூரியா கரைசலில் 12g யூரியா காணப்பட்டால் கரைசலின் மூலத்திறன் யாது?
7) 2m 300ml யூரியா கரைசலில் உள்ள யூரியாவின் நிறை யாது?

03. மனித உடலின் சில தொகுதிகளில் காணப்படும் அமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.




1) இவை ஒவ்வொன்றும் எத்தொகுதியைச் சேர்ந்தவை என குறிப்பிடுக?
2) A எவ்வகையான கலம் அதன் தொழில் யாது? இங்கு I என இலச்கமிடப்பட்ட பகுதி யாது?
3) B யில் X, Y எவை இங்கு நடைபெறும் செயல்முறை எவ்வாறு அழைக்கப்படும்?
4) C யின் பெயர் யாது? N, M என்பவைகளைப் பெயரிடுக?
5 C யின் தொழிலையும் தருக?
6) C காணப்படும் தொகுதியில் இருந்து A காணப்படும் தொகுதிக்குள் நேரடியாகச் செல்லும் உணவுக் கூறுகள் எவை? அவை C யின் எவ்வெழுத்துக்களால் காட்டப்பட்ட பகுதியினூடாக உள்ளெடுக்கப்படுகின்றது?
7) உடற்கலத்தில் நடைபெறும் எச் செயற்பாட்டிற்கு A, B, C மூன்றினது தொடர்பும் தேவைப்படுகிறது?
8) N ஆல் உள் எடுக்கப்படும் கூறில் காணப்படும் மூலகங்களைத் தருக?
9) வினா 8ல்நீர் கூறும் மூலகங்களில் இரண்டு எமது உடலில் இருந்து வளிமண்டலத்தை எவ் வடிவில் வந்தடைகின்றது எனக் குறிப்பிடுக?
10) Y இல் காணப்படும் A ஈரலை அடையும் பாதையைத் தருக?

04. மின்சக்தியைப் பெற பயன்படுத்தும் சாதனங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



(4ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறும் சமூகக்கல்வியும் O/L

## 1. இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி

புராதன காலங்களில் மக்களின் விவசாயத்தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு குளங்களைக் கட்டவேண்டிய கடமை அரசனிடம் காணப்பட்டது. வரலாற்றுக்கதைகளில் விஜயமன்னனின் அமைச்சர்களில்ஒருவனான அனுராத என்பவனாலேயே முதன்முதலில் குளம் கட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது. எனினும் இதுபற்றிய சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை.

### i பண்டுகாபயன்

இவனால் அபயவாவி, ஜெயவாவி, காமினிவாவி, என மூன்று குளங்கள் கட்டப்பட்டதாக வரலாற்றுக்கதைகள் கூறுகின்றன. அவற்றுள் அபயவாவி மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அது இப்போது பசவக்குளம் எனப்படுகிறது.

### ii தேவநம்பியதிஸ்ஸ (கி.மு 247 - 207)

நீர்ப்பாசன வரலாற்றிலே இவன் காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகின்றது. இவனால் திஸாவாவி அமைக்கப்பட்டது அபயவாவி,திஸாவாவி ஆகிய இரண்டு வாவிகளும் அனுராதபுரத்து மல்வத்துஓயாவுக்கு அண்மையில் அமைந்துள்ளன.

### iii சாத்தாதிஸ்ஸ

இவனால் 18 குளங்கள் கட்டப்பட்டதாக வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன.

கிறிஸ்து காலத்தின் ஆரம்பம் வரை கட்டப்பட்ட் குளங்கள் பரம்பியுள்ள முறையினை நோக்கும்போது அவை மல்வத்துஓயா, கலாஓயா, ததுறுஓயா, கிருந்திஓயா, மாணிக்ககங்கை, கும்புக்கண்ஓயா, வளவகங்கை, கல்ஓயா ஆகிய ஆறுகளை அண்டியே அமைக்கப்பட்டுள்ளன.

### iv வசபன் (கி.பி. 67-111)

பெருங்குளங்களை கட்டுவதிலேயே இவன் முன்னோடியாகத் திகழ்ந்தான். இவனால் 11 குளங்களும் 12 கால்வாய்களும் கட்டப்பட்டன. மகாவிலாச்சியக்குளம், நொச்சிப் பொத்தன குளம் கிரிவடுன்னகுளம் என்பன கண்டறியப்பட்டுள்ளன. இம் மன்னனால் அலகர கால்வாயும் அமைக்கப்பட்டது.

### v மகாசேனன் (கி.பி-274-304)

இவனால் 16 குளங்களும், 1கால்வாயும் கட்டப்பட்டது. இவற்றுள் மின்னேரியாகுளம், குருளுவாவி, மகாணதறாவாவி, மாமினியவாவி, மகாறத்மலேவாவி, கவுதல்லவாவி, மாகல் கடவளவாவி போன்றன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவனாலேயே பப்பதத்த கால்வாயும் அமைக்கப்பட்டது. இவன் மின்னேரிய குளத்தை கட்டியதால் மின்னேரியா தெய்வம் என அழைக்கப்பட்டான்.

### vi தாதுசேனன் (கி.பி. 455-473)

இவன் 18 குளங்களையும் கால்வாயையும்அமைத்தான். கலாவாவி, மாததுகமவாவி, பானகம்வாவி அல்லது பாணன் குளம், மாணாமதவவாவி, மெத்தகுட்டிய வாவி, மாவெவியவாவி அல்லது மகளுவாவி போன்றன அமைக்கப்பட்டன. இம்மன்னனால் ஜோதகால்வாய் ஜெயகங்கை அமைக்கப்பட்டது.

### vii இரண்டாம் முகலன் (கி.பி. 531-551)

இவன் இலங்கையில் குறிப்பாக மூன்று குளங்கள் கட்டுவித்தான். இவற்றுள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பதவியாக்குளம் பத்பகன்குளம் (நாச்சத்துவச வாவி) ஆகியவை ஆகும்.

### viii முதலாம் அக்போ (கி.பி 571-601)

சிறிவட்டமானகவாவி, குறுந்துவாவி அல்லது தண்ணிமுறிப்புக்குளம், மாமடுவக் குளம் போன்றவற்றை இவன் அமைத்தான் அத்துடன் மினிப்பே அல்லது மணிமேகலை என்ற அணைக்கட்டும் இவனாலேயே அமைக்கப்பட்டது.

**க. கோபி**

### iX. இரண்டாம் அக்போ (கி.பி 604 - 641)

இவனுடைய காலத்தில் கந்தளாய்க்குளம் கிரிதலை வாவி என்பன அமைக்கப்பட்டன. இவன் ஆட்சியில் நீர்ப்பாசன வேலைகள் உச்ச நிலையை அடைந்திருந்தன. ஆற்றுநீரை திசைதிருப்பி நீரைச் சேமித்தல் நீரைப் பேணல் ஆகியவை சம்பந்தமான பல நடவடிக்கைகள் ஒன்று சேர்க்கப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் பூரண நிலையை அடைந்திருந்தன.

இந்த வேலைகளை மேற்கொள்வதற்கு தொழிலாளர் பயன்படுத்திய தொழில்நுட்ப அறிவுபற்றி அறியமுடியாதுள்ளது.

இவற்றை புராதன இலங்கையின் தொழில்நுட்ப அறிவு தொழில்நுட்பப்பிரிவினர் மத்தியிலே குருசீடன் முறையிற் பரம்பரை பரம்பரையாக வழங்கப்பட்டு வந்தமையால் அது எழுதிவைக்கப்படவில்லை.

இவனுக்குப் பின் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக நாட்டின் அரசியல் நிலை குழப்பமாக இருந்தது. பின்னர் மானவர்மன்(கி.பி 684-708) ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் நாட்டில் அமைதி நிலவியது. கி.பி 1017 இல் சோழரால் அனுராதபுரம் கைப்பற்றப்பட்டதும் தலைநகரம் பொலநறுவைக்கு இடம்மாற்றப்பட்டது.

### X. முதலாம் விஜயபாகு (கி.பி 1070 - 1110)

இவனது காலத்தில் புனரமைப்பு நடவடிக்கையிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. சோழர் ஆட்சியில் சிதைவுற்றிருந்த (1017 - 1070) நீர்ப்பாசன முறையினை புனரமைத்தான். இவன் அலகரக் கால்வாயை திருத்தி அதனுடன் இணைந்த மின்னேரியா கவுடுலு கந்தளாய் நீர்ப்பாசன முறையை உயர் நிலைக்கு கொண்டு வந்தான். இவனால் மாகல் கடவள மகா கணதறாவ, பத்பகன் வாவி நாச்சத்துவச போன்ற குளங்கள் திருத்தி அமைக்கப்பட்டது.

### Xi. முதலாம் பராக்கிரம பாகு (கி.பி 1153 - 1186)

இலங்கையின் நீர்ப்பாசன வரலாற்றின் இவன்காலம் ஒரு பொற்காலமெனக் கருதப்படுகிறது. கி.பி 1153ல் பொலநறுவை அரசனாவதற்கு முன்னர் கலா ஓயாவுக்கும் களுகங்கைக்கும் இடைப்பட்ட தென் பிரதேசத்து அதாவது மாயரட்டையின் மகா ஆதிப்பாதன் என்ற பதவியை வகித்துக்கொண்டு பராக்கிரமபுரம் (பண்டுவஸ்நுவர) என்ற பெயரிலே ஒரு நகரை அமைத்து அங்கே வசித்து வந்தான் அப்போது இவன் ததுறுஓயாவிற்கு குறுக்கே மூன்று இடங்களில் அரண்கள் கட்டுவித்து கால்வாயின் வழியே தாழ்ந்த பிரதேசங்கட்கு நீர் வழங்கினான். இவற்றுக்கு அண்மையில் உள்ள பண்டார வாவியை பெரிதாக்கினான். களுத்துறை மாவட்டத்தில் அமைந்த சதுப்பு நிலத்தை பயிர் செய் நிலமாக மாற்றினான்.

இவன் கி.பி 1153 இல் பொலநறுவைக்கு அரசனான பின்னர் தோபாவாவியையும் தும்புலு வாவியையும் இணைத்து பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தான். வானிலிருந்து விழும் ஒருதுளி நீரேனும் கடலில் கலக்கல் ஆகாது என இவன் அறிக்கை விடுத்ததும்குறிப்பிடத்தக்கது

### xii நிஸ்ஸங்கமல்லன்

இவனால் நிஸ்ஸங்க சமுத்திரம் என்ற குளம் அமைக்கப்பட்டது. கி.பி - 1215இல் இடம்பெற்ற மாகனின் படை எடுப்பினைத் தொடர்ந்து இலங்கையின் நீர்ப்பாசனம் வீழ்ச்சி அடைந்தது. மக்கள் றுகுணரட்டை நோக்கியும் தென்மேற்கு நோக்கியும் இடம்பெயர்ந்தனர். எனவே தொழிலாளர் வசதியும் குறைவு உறுதியான ஆட்சியும் காணப்படவில்லை.


## பதவி வெற்றிடம்

1. தமிழ் தட்டெழுத்தாளர்
2. கணக்கு லிகிதர்

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு தகைமையுடைய ஆண், பெண் இருபாலாரும் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

காலம்:- 10-12-94
நேரம்:- மு.ப. 9-30 - பி.ப 2-00 மணி
இடம்:- சுவையருவி, 5,7, இராசன் தெரு யாழ்ப்பாணம்.

(சி-10852)



## தவறிவிட்டது

5-12-94 அன்று யாழ் நவீன சந்தைப் பகுதியில் த 1 - 7706 இலக்கமுடைய சாளி (மோட்டார் வாகனம்) ஆவணங்கள் (Documents) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீதன் வண்ணச் சோலை 39, நவீன சந்தை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(10317)


## சிறுவர் அரங்கு

சிறுவர்களின் உளவிருத்தியை வளர்க்கும் நோக்குடன் ஈழநாதம் மக்கள் தினசரி, சிறுவர் அரங்கு எனும் புதிய பகுதியை விரைவில் தரவுள்ளது. மேற்படி அரங்கை அணிசெய்ய வாசகர்களிடமிருந்தும்,சிறுவர்களிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இப்பகுதியில் பொதுஅறிவு எனும்வகையில்புதிய தகவல்கள் பலவும் வெளிவரவிருக்கின்றன.

## விஞ்ஞானம்
### பகுதி II

1) இங்குள்ள டைனமோவும், மின் கலமும் எவ்வகையானவை என தந்து, அவற்றில் ஏற்படும் சக்தி மாற்றங்களையும் குறிப்பிடுக,
2) அ) A, B, C யின் பெயர்களைத் தருக?
   ஆ) X, Y Z இன் பெயர்களைத் தருக?
3) A யிலும் பார்க்க விட்டம் குறைந்த வேறொரு பகுதியை இணைத்தால் ஏற்படும் மாற்றத்தையும், அதற்கான காரணத்தையும் தருக?
4) இங்குள்ள மின்கலத்தில் மின்சக்தி —> இரசாயன சக்தியாக மாறும் சந்தர்ப்பத்தைத் தருக?
5) இவ் டைனமோவின் அமைப்பில் மாற்றத்தை மேற்கொள்ளாது பெறப்படும் மின்சக்தியைக் ...

... படும் இனப் பெருக்கத்திற்குரிய அலகு எது? இதை ஒத்த அலகு Aயில்.எங்கு காணப்படுகிறது?

vii) B யில் 2 இன் தொழில் யாது?
viii) வினா (vi) நீர் கூறும் அலகானது தோன்றும் இடத்திலிருந்து வெளியேறும் பாதையை ஒழுங்காக தருக?
ix) A யில் 7இல் காணப்படும் கூறு 4 அடைவது எவ்வாறு அழைக்கப்படும். இதற்கு ஏதுவாக அமையும் காரணிகளைத் தருக?
x) A யில் 6ல் நடைபெறும் செயற்பாடு இரண்டு தருக இவை ஒவ்வொன்றும் விலங்கில் எங்கெங்கு நடைபெறுகின்றன என கூறுக?


### பகுதி II விடைகள்

**வினா 1**

1. வளி. நீர், நிலம், ஒளி

3) 1 மூல் நிறை $= 60g$
   ∴ 2.5 மூல் $= 60 \times 2.5$
   $= 150g$
4) 60g யூரியாவிலுள்ள மூ. கூறுகள்
   $= 6.023 \times 10^{23}$
   30g யூரியாவிலுள்ள மூ. கூறுகள்
   $= \frac{6.023 \times 10^{23}}{60} \times 30$
   $= \frac{1}{2} \times 6.023 \times 10^{23}$
5) 60g யூரியா = 1 மூல்
   ∴ 90g யூரியா $= \frac{1}{60} \times 90$
   = 1.5 மூல்
6) 500 mlல் உள்ள யூரியா
   = 12g
   ∴ 1000 mlல் உள்ள யூரியா
   = 24g


6)



7) x, y -ஈயசல்பேற்று படிதல்
   z- தண்ணீர்ப்பு குறையும்
8) y இன் ஊடாக
9) $E = \frac{V^2}{R} t$
   $= \frac{12^2}{...} \times 10 \times 60$

4) இங்குள்ள மின்கலத்தில் மின்சக்தி —> இரசாயன சக்தியாக மாறும் சந்தர்ப்பத்தைத் தருக?
5) இவ் டைனமோவின் அமைப்பில் மாற்றத்தை மேற்கொள்ளாது பெறப்படும் மின்சக்தியைக் கூட்ட நீர் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை யாது?
6) இவ் டைனமோவைப் பயன்படுத்தி இங்குள்ள கலத்தை மின் ஏற்ற மேலும் உமக்குத் தேவையான கட்டமைப்பை படம் வரைந்து காட்டுக.
7) கலம் மின்னிறக்கம் அடையும் பொழுது **X, Y, Z**-ல் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடுக?
8) இக் கலத்தை மின் ஏற்ற **X** இன் ஊடாகவா, **Y** இன் ஊடாகவா மின் ஓட்டத்தை செலுத்துவீர்?
9) 30°C யில் உள்ள 2Kg நீரை 6Ω தடையை 12V மின்முதலுடன் இணைத்து 10 நிமிடங்களுக்கு நீர் சூடாக்கப்பட்டது. சுருளில் பிறப்பிக்கப்பட்ட சக்தியைக் காண்க.
10) நீரின் தன் வெப்பக் கொள்ளளவு 4200 J/Kg/°C எனக் கொண்டு நீரில் ஏற்படும் வெப்ப நிலை மாற்றத்தைக் காண்க?

05. பின்வருவனவற்றிற்கு விஞ்ஞான விளக்கம் தருக?
1) நீரினுள் அமிழ்ந்துள்ள பொருளை நீர் மட்டம் வரை தூக்குவது இலகுவாக இருக்க நீர் மட்டத்தின் மேலே தூக்கும்போது பாரம் கூடவாக இருத்தல்
2) அணைக்கட்டுக்களில் உள்ள புற்களை மாட்டை மேய விடுவது ஆபத்தானதாகும்.
3) கிணற்று நீரில் வெள்ளி நைத்திரேற்றுக் கரைசல் தயாரிக்கப்படுவதில்லை.
4) இரும்புத் திறப்பிற்கு தகரப் பூச்சை விட நாகப் பூச்சே சிறந்தது
5) தொடர்ந்து தாவரம் வளரும் மண் அமில இயல்புடையதாகல்
6)


(A) (B)

தாவரத்தினதும் விலங்கினதும்ஒரு குறித்த தொகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.
i) A தாவரத்தின் எவ்வுறுப்பாக தொழிற்படுகிறது எனவும் இதன் செய்ற்பாட்டையும் தருக?
ii) B எத்தொகுதி
iii) A யில் 1-8 வரையுள்ள பகுதிகளையும் X, Y இனையும் பெயரிடுக
iv) B யில் 1-5வரையுள்ள பகுதிகளை பெயரிடுக?
v) Bக்கு ஒத்த Aயில் உள்ள பகுதி எவ்வெழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?
vi) B யில் காணப்படும் 1ல் இருந்து தோற்றுவிக்கப்

# பகுதி II விடைகள்

**வினா 1**

1. வளி. நீர், நிலம், ஒளி
2. a) கைத்தொழிலிற்குரிய மூல வளங்களை பௌதிக சூழலில் இருந்து பெறுவதனால் அவை குறைவடைதல்
   b) தொழிற்சாலைக் கழிவுகள் வளி, நீர், நிலம் என்பவற்றை மாசடையச் செய்தல்
3. a) உயிர் சூழல் தமது தேவைகளை பௌதிக சூழலில் இருந்து பெறுகின்றன என்பதை உணர முடிகிறது அல்லது
   b) உயிரினங்கள் பௌதிக சூழலுடன் சார்ந்துள்ளன என்றோ

   அல்லது

   c) உயிரினச் சூழலிற்கும் பௌதிக சூழலிற்கும் இடையில் தொடர்பு உள்ளது என்றோ விடை கூறலாம்.
   (மேற்கூறியவற்றில் ஒன்றை கூறினால் போதும்)
4. ஒளித்தொகுப்பு, சுவாசம்
5. பச்சயமுள்ள தாவரங்களில் நடைபெறும். ஆக்கியில் காணப்படும்
6. வளி அல்லது தரையில் இருந்து தாவரங்களின் ஊடாக உணவு மூலம் எமது உடலை வந்தடைகிறது.
7. இயற்கை மூல வளங்களை விரயமாக்காது பேணுவதுடன் (வளக் காப்பு) தொழிற்சாலைக் கழிவுகளால் சூழல் மாசடைவதை குறைத்து அல்லது அக்கழிவுகளை சுழற்சி முறையில் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தி சூழலில் பாதகமான விளைவுகளை ஏற்படாது தடுப்பதற்குரிய எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
8. ஆக்கி (உற்பத்தியாளர்)
9. பிரிகையாளர்
10. a) செயற்கை வளமாக்கி, கிருமிநாசினி பாவனையால் மண்ணில் உள்ள நுண்ணங்கிகள் அழிதல்
    b) சூழலில் இருந்து பெற்ற கூறுகளை மீண்டும் சூழலை அடையாது தடுத்தல்
    c) உக்க முடியாத பொருட்களை உற்பத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளால் மீண்டும் சூழலை அடைவது தடுக்கப்படும்.

**வினா 2**

அ)
1) 3-ம் கூட்டம் 2) 19
3) **D** ம், **F**ம் 4) 12
5) **A** 6) **B**
7) **D**ம் **F**ம் 8) **C**
9) **E** 10) 12g

ஆ) 1) $CO(NH_2)_2$
$= 12+16+2\times14+4\times1$
$= 60$

2) $\frac{28}{60} \times 100$
$= \frac{280}{6}$
$= 46.6\%$

$= 1.5$ மூல்

6) 500 mlல் உள்ள யூரியா
$= 12g$
∴ 1000 mlல் உள்ள யூரியா
$= 24g$
∴ மூலத்திறன் $= \frac{1}{60} \times 24$
$= \frac{1}{5} \times 2$
$= 0.4M$

7) 1000 ml 2mல் காணப்படுவது
$= 2 \times 60$
∴ 300 ml 2mல் காணப்படுவது
$= \frac{2\times60}{1000} \times 300$
$= 2\times6\times3$
$= 36g$

**வினா 3**

1) **A** - குருதிச் சுற்றோட்டத் தொகுதி
**B** - சுவாசத் தொகுதி
**C** - சமிபாட்டுத் தொகுதி

2) செங்குருதிச் சிறுதுணிக்கை - வாயுப் பரிமாற்றம்
**I** - குருதி நிறப்பொருள் (ஈமோகுளோபின்)
3) X - சிற்றறை
**Y** - குருதி மயிர்த்துளைக் குழாய்
வாயுப்பரிமாற்றம்

4) சடமுளை **N** - குருதிமயிர்த்துளைக்குழாய்
**M** - பாற்கலன்
5) சமிபாடடைந்த உணவுகளை அகத்துறிஞ்சல்
6) வெல்லம், அமினோ அமிலம், **N** ஆல்
7) சுவாசம்
8) **C, H, O, N**
9) C - $Co_2$
H - $H_2o$

10) சுவாசப்பை நாளம் -> இடது சோணை அறை -> இடது இதயவறை -> தொகுதிப் பெருநாடி -> ஈரல் நாடி -> ஈரல்

**வினா 4**

1) a) ஆடலோட்ட டைனமோ
b) சேமிப்புக்கலம் (துணைக்கலம்)
டைனமோ - இயக்கசக்தி -> மின்சக்தி
மின்கலம் - இரசாயனசக்தி -> மின்சக்தி
2) அ) **A** பற்சில்லு **B** காந்தத் திண்மம்
**C** கம்பிச்சுருள்
ஆ) **X** - pb **Y** - $pbo_2$ **Z** - $H_2So_4$
3) மின்குமிழின் பிரகாசம் கூடும் (மின் கூடியளவு தோன்றும்)
காரணம் சுழல்கதி அதிகரித்தல்.
4) மின் ஏற்றும் போது
5) சுழல் கதியைக் கூட்டல்

8) **Y** இன் ஊடாக
9) $E = \frac{V^2}{R} t$
$= \frac{12^2}{6} \times 10 \times 60$
$= 14400J$
10) $H = MS\theta$
$14400 = 2 \times 4200 \times \theta$
$\theta = \frac{14400}{2 \times 4200}$
$= 1.7°c$

**வினா 5**

1) நீரினுள் உள்ள பொருளில் நீரால் மேலுதைப்பு வழங்கப்படநிறைக்குறைவுஏற்படும். நீரின்மேலே வரமேலுதைப்பு அற்றுப்போக நிறைகூடுகின்றது
2) மண்ணரிப்பை தடை செய்வதற்காகவே புற்கள் வளர்க்கப்படுகின்றன. புற்களை மாடு மேய்ந்தால் மண்ணரிப்பு ஏற்பட்டு அணைக்கட்டு உடைந்துவிடும்.
3) கிணற்று நீரில் பிற உப்புக்கள் காணப்பட்டு அவற்றின் பிற உப்புக்கள் தோற்றுவிக்கப்படும். இதனால் கிணற்று நீர் பயன்படுத்தப்படுவதில்லை.
4) தகரத்திலும் (**Sn**) இரும்பு தாக்குத்திறன் கூடிய மூலகமாகையால் நாகப்பூச்சு சிறிதளவு சுரண்டப்பட்டாலும் வளியுடன் தொடர்புபடும்போது இரும்பு விரைவாக துருப்பிடித்துவிடும். நாகம் இரும்பைவிட தாக்குத்திறன் கூடியதாகையால் சுரண்டப்பட்டு வளியுடன் தொடர்புபட்டாலும் நாகம் துருப்பிடியாது (இரும்பை அரிப்படைய விடாது) எனவே நாகப்பூச்சே

**06.**

1 **A**-இலிங்க உறுப்பு - இலிங்ககல உற்பத்திமூலம் இலிங்க முறை இனப்பெருக்கத்தை மேற்கொள்ளல்
2 ஆண் இனப்பெருக்கத்தொகுதி
3 1-ஏந்தி 5-தம்பம்
2-புல்லி 6-சூலகம்
3-அல்லி 7-மகரந்தக்கூடு
4-குறி 8-இழை
x-யோணி y-கேசரம்
4 1-விதை 4-சிறுநீர்வழி
2-விதைமேற்திணிவு
3-அப்பாற்செலுத்தி 5-ஆண்குறி
5) **Y**
6) விந்துக்கலம், 7ல் காணப்படும் (மகரந்தக்கூட்டில்)
7) விந்துகல சேமிப்பு
8) சுக்கிலச் சிறுகுழாய் -> வெளிச்செலுத்தி -> விதைமேற்திணிவு -> அப்பாற்செலுத்தி -> சிறுநீர்வழி
9) மகரந்தச் சேர்க்கை
1- காற்று, 2- நீர், விலங்கு
10) 1- இலிங்ககல உற்பத்தி (சூல் வித்து) கருக்கட்டல்,
2- சூலகத்தில் - இலிங்ககல உற்பத்தி
கருக்கட்டல் - பலோப்பியாக்குழாயில் (சூலகக்கான்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களையும், அயல் நாட்டு விவகாரங்களையும், தனித்தனியாகவும் வேறுபட்டவையாகவும் கருதக் கூடிய காலம் கடந்து விட்டது.

-வால்டர் பெடெல் ஸ்மித்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## சட்டங்களுக்கு அப்பாற்பட்ட நெருக்கம்

சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியின் வெளியுறவுக் கொள்கை, குறிப்பாக இந்தியா தொடர்பான கொள்கை இன்று அரசியல் அரங்கில் முக்கியமாகப் பேசப்படும் / ஆராயப்படும் விடயமாக முதன்மை பெற்றுள்ளது. இந்நிலையானது பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரிடம் பல கேள்விகளைக் கேட்குமளவிற்கு அவசியமானதாகவும் மாறியுள்ளது.

இந்திய விவகாரம் இவ்வாறாக முதன்மை பெறுவதற்கு 'இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையுடன்' சேர்த்து அநுபார்க்கப்பட வேண்டிய அளவிற்கு முக்கியமாக இருப்பதே காரணமாகும். அதாவது இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடானது இப்பிரச்சினையில் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பாதிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருப்பதினால் ஆகும்.

ஆனால் இந்தியா குறித்து எழுப்பப்படும் கேள்விக்கு சிறந்த நட்பு நாடுகளுக்கிடையிலான உறவு என்ற ரீதியிலேயே அரசாங்கத்தரப்பினரால்பதில் அளிக்கப்படுகின்றது. அத்தோடு இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் நோக்கம் கொண்டதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு குறித்து விடுதலைப்புலிகள் இயக்கம் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயத்தில் இந்தியாவிற்கு எந்தவித கடப்பாடும் கொண்டதாக அரசாங்கம் இல்லை என சிறிலங்கா தரப்பு வலியுறுத்துகின்றது.

இதற்கு அனுசரணையாக இந்திய வெளிவிவகார அமைச்சும் இலங்கை விவகாரத்தில் தாம் தலையீடு செய்யவில்லை என்றும் சிறிலங்கா ஜனாதிபதியின் செயற்பாட்டுக்குத் தாம் குந்தகமாகவோ அன்றி அவரை வழி நடத்திச் செல்வதாகவோ இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் அரசுகளுக்கிடையிலான உறவுகள், இராஜதந்திர நடவடிக்கைகள் எல்லாம் வெளிப்படையாக அறிவிக்கப்படும் கொள்கை விளக்கங்களுக்குள் அடக்கப்படு

# வடபகுதி மக்களின் நாளாந்த பிரச்சினை தீர்வு; அரசு திருப்தியாகச் செயற்படவில்லை

வடபகுதி தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதில் திருமதி சந்திரிகாவின் அரசாங்கம்திருப்திகரமாக செயற்படவில்லை. இப்பிரச்சினைகள் தொடர்பாகஅரசாங்கம் வெளிப்படையாக கருத்துக் கூறாமல் தவிர்த்து வருவது தமிழ்மக்களிடையே நம்பிக்கையீனத்தை மேலும் வளர்ப்பதாகவே இருக்கின்றது.

அரசியல் அதிகாரம் கைக்கு எட்டியதுமே திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யுத்தத்தை நிறுத்தி வடக்கு-கிழக்கு பகுதியில் இயல்புநிலை தோன்றுவதற்கு பாடுபடப்போவதாக வாக்குறுதி அளித்திருந்தார். தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் அவசரமாகத் தீர்க்கப்படும் எனவும் அவர் உறுதிமொழி கூறியிருந்தார். அத்தியாவசியப் பொருட்களில் பலவற்றின் மீதான தடை உத்தரவுகளையும் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக அவர் நீக்கியிருந்தார்.

வடபகுதி மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாகவே விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையே அக்டோபர் நடுப்பகுதியில் இடம்பெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களின்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் குறிக்கோள்கள் தொடர்பாக பேசிய பிரதமரின் செயலாளர் பலபெத்த பெண்டி கூறுகையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதமர் மக்களிடம் பெற்ற ஆணையின் பெறுபேறாகவே யாழ்ப்பாணம் வந்துள்ளோம். வடபகுதியில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களைப் போக்கி பொருள்கள் தாராளமாகக் கிடைக்க வழி செய்வதோடு, சேதமடைந்த பகுதிகளை புதுக்கியமைத்து அரசின் சேவைகள் மீளக் கிடைப்பதற்கும் வழி காணப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். அவர் இன்னும் ஒருபடி மேலேபோய் ஆயுதரீதியான மோதலை தவிர்ப்பது தொடர்பாக பேசவும் தமக்கு அதிகாரம் இருப்பதாக குறிப்பிட்டார்.

ஆக்கபூர்வ சமிக்ஞைகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயிற்று. மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் களையப்பட்டு, பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்பப்பட்டு, சமாதானம் மீள நிலைநாட்டப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில், மக்களின் வேணவாவை தீர்க்கும் வகையில் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் வழங்கிய உத்தரவாதங்களிலிருந்து இப்போது ஏன் பின் வாங்குகின்றது? வடபகுதி மக்களின் உடனடிப் பிரச்சினை தீர்க்கப்படுவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவது ஏன்?

முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது பின்வரும் விடயங்கள் முக்கியமானவைஎன்பதில் இருதரப்புமே இணக்கம் கண்டிருந்தன.

1) ஆயுதரீதியான மோதல்களை தவிர்த்தல்.

2) பொருளாதாரத் தடையை நீக்குதல்.

3) குடாநாட்டுக்கும், பெருநிலப் பரப்புக்குமிடையே தரைவழிப் பாதை ஒன்றை திறத்தல்.

4) மீன் பிடிப்பதற்கான தடையை நீக்குதல்.

5) யாழ்ப்பாணத்தில் அகதிகளை மீளக் குடியமர்த்துதல்.

இவை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவசரமான உடனடிப் பிரச்சினைகளாகும். இவைகளுக்கு பரிகாரம் காணப்படுவதன் ஊடாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் நீக்கப்படுவதோடு

> வடபகுதியின் உடனடிப் பிரச்சினைகளை தீர்ப்பதாக சந்திரிகா அரசு வழங்கிய உறுதி மொழி இப்போது காற்றில் போய்விட்டது. இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'இன்சைட் ரிப்போட்' என்னும் ஆங்கில இதழில் வெளியான கட்டுரையை இங்கு தருகிறோம்.

பொது வாழ்வில் சமாதானமும், இயல்பு நிலையும் தோன்ற வழி ஏற்படும்.

இவற்றை ஆராயும்போது ஒரு மிக முக்கிய பிரச்சினை தெளிவாகும். அதாவதுஇவை ஒவ்வொன்றும் வடபகுதியின் இராணுவ நிலையுடன் தொடர்பு பட்டவை என்பதுவே அது. எதிர்ப்பு காட்டுவதிலேயே குறியாக இருக்கும் இராணுவம் இவை தொடர்பாகபிரச்சினைகளை உருவாக்கும்என்பதும்இராணுவத்தினரின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு இல்லாமல்இதில் எவையும் தீர்க்கப்பட முடியாது என்பதும் குறிப்பிடக் கூடியது.

போர்நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிப்பதற்கு இராணுவம் எதிர்ப்பு காட்டுகிறது. சமாதான நிலை தோன்றினால் விடுதலைப புலிகள் தம்மை மீள ஒருங்கமைத்து மீள் ஆயுதபாணிகளாகி தமது நிலைகளை பலப்படுத் திக் கொண்டு விடுவார்கள் என்பதே நிலையான கருத்தாக இருக்கிறது.

பொருளாதாரத்தடை விலக்கிக் கொள்ளப்படுவதையும் இராணுவம் விரும்பவில்லை. ஏனெனில் சில அத்தியாவசியப் பொருட்கள் இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படலாம் என அது கூறுகிறது.

தரைவழிப் பாதை ஒன்று திறக்கப்படுவதையும் இராணுவம் விரும்பவில்லை. ஏனெனில் இது விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அதிகரிக்கும்.

மீன் பிடித் தடை விலக்கப்படுவதையும் விரும்பவில்லை. ஏனெனில் கடற்புலிகள் தமது நிலையை பலப்படுத்திக் கொள்வர்.

அகதிகள் மீளக் குடியமர்வதையும் இராணுவம் விரும்பவில்லை. ஏனெனில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறுவதை இராணுவம் விரும்பவில்லை.

இராணுவத்தினரின் இந்தக் கடுமையான நிலைப்பாடுதான் சமாதானத்திற்கான பாதையில் முக்கிய தடைக்கல்லாக விளங்குகிறது பொது மக்களின் நாளாந்த வாழ்வில் இயல்பு நிலை தோன்றுவதற்கு குந்தகமாக இருக்கிறது. சமாதானத்திற்கான முயற்சி எதுவும் வடபகுதி தொடர்பான இராணுவத் தந்திரோபாயத்திற்கு பங்கம் ஏற்படுத்தாததாக இருக்க வேண்டும் என்றே இராணுவத்தினர் வலியுறுத்துகின்றனர், இராணுவத்தின் இந்த நிலைப்பாடு அரசாங்கத்தை குழப்பமடையச் செய்திருப்பதுடன் வடபகுதி மக்களின் அன்றாட உடனடிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதையும் தள்ளி வைத்துள்ளது,

இராணுவத்தினரின் இறுக்கமான கடினப் போக்கும் இராணுவ ரீதியான தாக்குதல் நடவடிக்கைகளும் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான தயாரிப்புகளும் தமிழர் பிரச்சினை அமைதி வழியில் தீர்க்கப்படுவதை இராணுவம் விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தினம் தொடர்பான தமது செய்தியில் குறிப்பிட்டு இருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது,

இராணுவத்தில் இருக்கும் கடும்போக்காளர்கள் தொடர்பாக அரசாங்கம் கடின நிலையை எடுக்க விரும்பவில்லை, அல்லது இராணுவத்தினர் மீது எந்த அழுத்தத்தையும் பிரயோகிக்க அரசாங்கம் விரும்பவில்லை. இந்தச்சூழ்நிலையில் சமாதான சூழல் உருவாகுவது என்பது இலகுவானது ஒன்றல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இராணுவத்தினர் விட்டுக்கொடுக்காத போக்கை கடைப்பிடிக்கும் வரை - இராணுவத்தின் இப்போக்கிற்கு அரசு ஆதரவு காட்டும்வரை தமிழ் மக்களின் அவசர மற்றும் உடனடிப் பிரச்சினைகள் கூட தீர்வு காணப்படாமலேயே நீடிக்கும்

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கு:

## பெருந்தொகை நிதித்தேவையே ஐ.தே.க.வழக்கை கைவிடக் காரணமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா தெரிவானதை ஆட்சேபித்து மனு

ஐ.தே.க தலைவரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

சென்ற வாரம் நடை

சட்டவல்லுனர்கள் தன்னிடம் தெரிவித்ததாகவும், இவ்வாறு பெருந்தொகைப் பணம் செலவிட்டும் சாதகமான

## தனிநாட்டுப் போரை இந்தியா ஆதரிக்கவில்லை

லக்ஷ்மன் கதிர்காமர்

[டாக்கா]

இலங்கையில் தனிநாடு கோரிப் போராடும் தமிழ்ப் போராளிகளை இந்தியா ஆதரிக்கிறது என்று எண்ணுவதற்கே இப்போது இடமில்லை. இவ்வாறு சிறி

விடுதலைப் புலிகளுடன் அமைதித் தீர்வுகாண தமது அரசு அனைத்தையும் செய்யும் எனவும், எனினும் அமைதி ஏற்பாடு காண்பது சுலபமானது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு அனுசரணையாக ... அமைச்சும் இலங்கை விவகாரத்தில் தாம் தலையீடு செய்யவில்லை என்றும் சிறிலங்கா ஜனாதிபதியின் செயற்பாட்டுக்குத் தாம் குந்தகமாகவோ அன்றி அவரை வழி நடத்திச் செல்வதாகவோ இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் அரசுகளுக்கிடையிலான உறவுகள், இராஜதந்திர நடவடிக்கைகள் எல்லாம் வெளிப்படையாக அறிவிக்கப்படும் கொள்கை விளக்கங்களுக்குள் அடக்கப்படுவதில்லை. ஒவ்வொரு அரசின் நலன்கருதியும், தேவை கருதியும் வெளிவராமலே பல காரியங்கள் திரைக்குப் பின்னால் அரங்கேறி விடுகின்றன. இதில் மிரட்டல்களும் விட்டுக் கொடுப்புக்களும், மண்டியிடலும் அரங்கேறுவதும் உண்டு.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கத்திற்கும் - ராவ் அரசாங்கத்திற்கும் இடையில் பல விடயங்கள் இடம்பெற்றிருப்பதற்கான தடயங்கள் உள்ளன. இதில் முதலாவதாக சந்திரிகா பிரதம மந்திரியாக பதவி ஏற்றதைத் தொடர்ந்து இந்தியப்பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதுவர் சந்திரிகாவைச் சந்தித்து கையளித்துள்ள கடிதத்தைக் குறிப்பிடலாம். இறுதியாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் சந்திரிகாவிடம் இருந்து இந்தியப் பிரதமருக்குக் கொண்டு செல்லும் தகவலைச் சொல்ல முடியும்.

இதில் முதலாவது கடிதம் சந்திரிகாவிற்குக் கிடைக்கப் பெற்று நூறு நாட்கள் கடந்த பின்பும் அதுகுறித்த விபரங்கள் வெளிவரவில்லை. ஊகங்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. லக்ஷ்மன் கதிர்காமர் கொண்டு செல்லும் தகவல் பற்றி இப்பொழுது எதுவும் கூற முடியாது. அவை வெளிவரும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் தற்பொழுது இந்திய-சிறிலங்கா நட்பில் மிக நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் தெளிவாக உறுதி செய்யக்கூடியதாகவுள்ளது. அது சாதாரணவெளியுறவு நட்புக்கும் அப்பால்பட்ட ரீதியில் நெருக்கமானது என்பது மட்டும் நிச்சயம். இதற்கு எடுத்துக்காட்டாக ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை விவாகப் பதிவாளரைசிறிலங்கா இந்தியாவிற்கு நாடு கடத்தியுள்ளதைக் கூறலாம்.

சிறிலங்காவிற்கும்- இந்தியாவிற்கும் இடையில் குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தம் இல்லாத நிலையிலும், சம்பந்தப்பட்டவர் குற்றவாளி என இனம்காணப்படாத நிலையிலும் கூட, சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது இந்திய - சிறிலங்கா உறவானது சட்டதிட்டத்திற்கு அப்பாற்பட்ட ரீதியிலும் செயற்படுவதைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்தநிலையில் இந்திய- சிறிலங்கா உறவில் வெளிப்படையான அறிவிப்புக்களுக்கும் அப்பால் நெருக்கமான உறவு இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. ஆகையினால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் கை செயற்படாது என்று எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானதாகும். ஆனால் அது எவ்வளவு தூரம் நீளும் என்பதை சிறிலங்கா அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்தே ஊகிக்க முடியும்.

---

# ஐ.தே.க.வழக்கை கைவிடக் காரணமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா தெரிவானதை ஆட்சேபித்து மனு ஒன்றைத் தாக்கல் செய்ய முயற்சி செய்துபின் அதனை கைவிட்டதற்கு, நீதிமன்ற விசாரணைக்கு பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டிவரும் எனக் கண்டதே காரணம், இவ்வாறு ஐ.தே.க தலைவரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

சென்ற வாரம் நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சுமார் 18 மில்லியன் ரூபா பணம்வரை வழக்குச் செலவுக்காக தேவைப்படும் எனச் சட்டவல்லுனர்கள் தன்னிடம் தெரிவித்ததாகவும், இவ்வாறு பெருந்தொகைப் பணம் செலவிட்டும் சாதகமான முடிவு கிடைப்பது சந்தேகம் என்பதனால் வழக்குத் தாக்கல் செய்யும் திட்டத்தைத் தான் கைவிட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்துள்ளார்.

---

## இராணுவத்திற்கு

னைக்கு திறந்து விடும்படியும், அதற்கு வசதியாக பூநகரியிலிருந்து இராணுவ நிலைகளை மீளப்பெறும்படியும்வற்புறுத்தியிருக்கின்றனர் அரசதரப்பு பிரதிநிதிகளோ இது விடயம் முக்கிய கவனமெடுத்து ஆராயப்படுமெனக் கூறியிருந்தனர். எனினும், இந்த யோசனையைஇராணுவஉயர்பீடம் வன்மையாக எதிர்ப்பது இப்போது நன்கு புலனாகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து ஒரு அங்குலமேனும் இராணுவம் பின்வாங்க மாட்டாது என்பதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் நிலைப்பாடாகவுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் இராணுவத்தினர் வகுத்துள்ள மூல உபாயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என அவர் கருதுகின்றார். இத்தகைய கடினமான நிலைப்பாடுகள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சாதாரண பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டைகளாகமுனைப்புப்பெற்றுள்ளன உதாரணமாக தமது சொந்தப் பிரதேசத்திலேயே சுதந்திரமாக நடமாடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிப்பதாக அமைகின்றது.

இராணுவ ரீதியில் மிகக் குறைந்த முக்கியத்துவம் அல்லது முக்கியத்துவமே இல்லாத ஒரு நிலப்பகுதியிலிருந்து வெளியேறுவதில் இராணுவம் காட்டும் அழுத்தமான பிடிவாதத்திற்கு காரணம் என்ன? பூநகரியின் வசதிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இராணுவத்தினர் பெருமளவில் இரத்தத்தைச்சிந்தியுள்ளனர் என்பதே அவர்கள் கூறும் நியாயமாகவுள்ளது. முதல் தடவையாக இராணுவம் இந்தப்பகுதியை ஆக்கிரமித்தபோது தனித்த ஒரு துளி இரத்தத்தைக்கூட அவர்கள் சிந்தியிருக்கவில்லை இது உண்மைதான். எனினும் இப்பகுதியை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்கள் பெருமளவு இரத்தம் சிந்த வேண்டியிருந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும், கடற்படையினரும் பூநகரிக்கான சண்டையின் போது உயிரிழந்து இருந்ததும் தெரிந்த ஒன்றுதான். இந்தப்பகுதியை தொடர்ந்தும் இராணுவம் தக்க வைத்துக்கொள்ள விரும்பினால் இனிமேலும் இரத்தம் சிந்தப்படுவதை எவரும் தடுக்க முடியாமலே போய்விடும். அப்படியான எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றபோதும் இச்சிறிய துண்டு நிலப்பரப்பை இராணுவம் தக்க வைத்துக் கொள்ள எண்ணுவது ஏன்?

இராணுவதலைமைப்பீடம் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிடும் தமது இராணுவ மூல தந்திரோபாயத்தை இன்னும் கைவிட்டுவிடவில்லை. குடாநாட்டின் நிலப்பரப்பின் அளவு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடியது எனப்படும் பொதுசன இழப்பு என்பன போன்றவற்றிலேயே இது தடைப்படுவதாகவும் கூறப்படுகிறது. ஜெனரல் வனசிங்கா தான் இத் தந்திரோபாயத்தின் சூத்திரதாரி ஆவார். எல்லாப் பக்கத்திலும் பாதைகளை நன்கு இறுக்கி மூடிவிட்டு குடாநாட்டினுள் முழுப் பலத்துடன் ஊடுருவிச் செல்வதே ஜெனரல் ஹமில்டனின் திட்டமாகும். இதன் காரணமாக இராணுவம் பூநகரியின் முக்கியத்துவம் குறித்து பிரஸ்தாபிப்பதுடன் பூநகரி - சங்குப்பிட்டி பாதை திறக்கப்படுவதில் முட்டுக்கட்டையாகச் செயல்படுகிறது.

இராணுவத்தின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்படுவதில் திருமதி சந்திரிகாவின் அரசு முற்படுவதாக இல்லை. அதாவது கடல் மூலம் படையினர் சுற்றிவளைத்து யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் ஊடுருவிச் செல்லும் இராணுவத்தின் திட்டத்திற்கு அரசு முட்டுக்கட்டை போடுவதாக இல்லை. குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை திறக்கப்படுவதில் அரசாங்கம் ஆர்வம் காட்டாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும். பூநகரிப் பகுதியிலிருந்து விலகிச் செல்வதற்கு இராணுவத்தை இணங்கச் செய்வது என்ற கருத்தே ஜெனரல் வனசிங்கவிற்கு கசப்பாக இருப்பதற்கும் இதுவே காரணமாகும். இதுதான் நிலைப்பாடானால் இராணுவ ரீதியிலான அணுகுமுறையிலேயே பிரச்சினைக்கு தீர்வு காண முனையும் அரசாங்கத்தின் போக்கில் மாற்றம் இருப்பதாக இல்லை என்றே எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

---

[டாக்கா]

இலங்கையில் தனிநாடு கோரிப் போராடும் தமிழ்ப் போராளிகளை இந்தியா ஆதரிக்கிறது என்று எண்ணுவதற்கே இப்போது இடமில்லை. இவ்வாறு சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பங்களாதேச தலைநகர் டாக்காவின் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளுடன் அமைதித் தீர்வுகாண தமது அரசு அனைத்தையும் செய்யும் எனவும், எனினும் அமைதி ஏற்பாடு காண்பது சுலபமானது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

பங்களா தேசத்திற்கான தமது விஜயத்தை தென்னாசிய நாடுகளுடன் இலங்கை பாராட்ட விளையும் நட்புறவின் வெளிப்பாடாக கருதப்பட வேண்டும் எனவும்அவர் தெரிவித்தார்.

---

# வடமேல் மாகாண சபை ஆளும் கட்சி வசமாகும்?

வடமேல் மாகாணசபை மீண்டும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் கீழ் வரும் என தற்போது கிடைக்க பெற்ற செய்திகள் தெரிவிப்பதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை ரணில் விக்கிரமசிங்காவிடம் கைமாறியதை தொடர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் காமினி திசாநாயக்காவின் ஆதரவாளர் கடுமையான எதிர்ப்பினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சென்ற வருடம் நடைபெற்ற மாகாணசபை தேர்தலின் போது பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து ஆட்சியைகைப்பற்றினும் பின்னர் காமினி திசாநாயக்க, ஜி. எம். பிறேமச்சந்திர ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்ததை தொடர்ந்து ஐக்கியதேசிய கட்சியிடம் கைமாறியது குறிப்பிடத்தக்கது.

தற்போது கிடைக்க பெற்ற தகவலின்படி வடமேல் மாகாணசபையில் உள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒன்பது உறுப்பினரும் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல் பட போவதாகவும் இவ்வாறு இணைவது மட்டும் அன்றி எதிர் வரும் தேர்தல்களின் போது பொது ஜன ஐக்கிய முன்னணியின்சார்பில் போட்டியிடப்போவதாக தெரியவந்துள்ளது.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 12. 07**

**புதன் இரவு**

08.01 -குயிலோசை- நிகழ்ச்சியில் சா.வே.பஞ்சாட்சரம் எழுதிய ''மண்ணை மயக்கும் இன்பங்கள், துன்பங்கள்'' கிராமிய நிகழ்வு

08.20 -ஏர்முனை- நிகழ்ச்சியில் ''மரமுந்திரிகை'' சித்திரம்

08.30 -செய்திகள்

08.40 -நாடகம்- மலரன்னை எழுதிய ''புரிந்துணர்வு''

09.00 -மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

**1994-12 08**

**வியாழன் காலை**

07.02 -மாவீரவணக்கம்

07.15 -விடுதலை கீதங்கள்

07.30 -செய்திகள்

07.35 -பத்திரிகைச் செய்திகள்

07.40 -விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08.00 -மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# தமிழ்ப்பகுதிக்கான அமெரிக்க உதவி இராணுவ 'பாவனைக்கு ஒப்படைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கென வந்த இரண்டு கோடி ரூபா பெறுமதியான மருத்துவ பொருட்கள் மற்றும் ஆறு அம்புலன்ஸ் வண்டிகள் இராணுவத்திடம் வழங்கப்படவுள்ளன.

அமெரிக்க அரசால் வழங்கப்பட்ட இவ்வைத்திய உபகரணங்கள் அடுத்த வாரம் கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படவுள்ளது. இத்தகவலை இராணுவ மருத்துவப்பிரிவு அதிகாரி துரைராஜா வெளியிட்டார்.

## போலி கடவுச் சீட்டு மோசடி ஹொங்கொங் தளமாக பாவிப்பு

### ஹொங்கொங் பொலிஸ் விசாரணைக்கு கொழும்பு வந்தது

(கொழும்பு)

ஹொங்கொங்கை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச போலி கடவுச் சீட்டு மோசடி தொடர்பாக விசாரணை மேற்கொள்ள ஹொங்கொங் பொலிசைச் சேர்ந்த உயர்மட்ட குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் வைத்து இரு சிங்கப்பூர்வாசிகளை இரகசியப் பொலிசார் விசாரித்தபோதே இவ்விடயம் அம்பலமானது. இரகசிய பொலிசாருக்கு உதவவே ஹொங்கொங் பொலிசார் கொழும்பு வந்துள்ளனர். ஹொங்கொங்கைச் சேர்ந்த இரு சீனர்கள் இலங்கையிலிருந்து பாரேயினுக்கு சென்றபோது பாரேயின் விமான நிலையத்தில் போலி பிரிட்டிஷ் பாஸ்போட்டுடன் பிடிபட்டனர். அங்கிருந்து இவர்கள் கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டனர். தற்போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கனடாவிற்கும் பிரிட்டனிற்கும் தப்பிச்செல்லும் சீனர்கள் ஹொங்கொங் வழியாக பிரிட்டிஷ் கடவுச் சீட்டுடன் தப்பிச் சென்று வந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. சர்வதேச கொம்பியூட்டர் முறை தொடர்புகளை கொண்டுள்ள வசதிகள் இலங்கையில் இல்லாமையினால் சர்வதேச போலி கடவுச் சீட்டுகள் கண்டுபிடிக்கும் வாய்ப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

## தாழமுக்கம் உருவாகிறது?

கிழக்கு மாகாணத்தின் கரையோரத்திற்கு அப்பால் தாழமுக்கம் தோன்றக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் வடக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் மழைபெய்யலாம் என்றும் அவதான நிலையம் அறிவித்தது.

## வவுனியா அரச அதிபர் கிளிநொச்சிக்கு நியமனம்

வவுனியா அரச அதிபர் தில்லைநடராஜா கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக நியமனம் பெறவுள்ளார். இவரின் இடத்திற்கு மன்னார் அரச அதிபர் கே. கணேஸ் இடம்மாறி வரவுள்ளார்.

மன்னார் அரச அதிபராக மன்னார் மேலதிக அரச அதிபர் எஸ்.எம். குரூஸ் நியமிக்கப்படலாம். யாழ்.மாவட்ட அரச அதிபர் பதவிக்கு கிளிநொச்சி அரச அதிபர் கே. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காமினி கொலை விசாரணை இந்தியாவுக்குபொலிஸ்குழு

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா கொலை விசாரணை தொடர்பாக இந்திய அதிகாரிகளின் உதவியைப் பெறும் பொருட்டு சிறிலங்கா பொலிஸ் குற்ற புலனாய்வுக் குழு ஒன்று இவ்வாரம் இந்தியா செல்லவுள்ளது.

இதே சமயம் கிராண்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக குற்ற புலனாய்வு பிரிவின் சகல ஆவணங்களும் சட்டமா அதிபரின் மேலதிக நடவடிக்கைக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்றது.

காமினியின் கடைசி மூன்று பொதுக் கூட்ட வீடியோ நாடாக்கள் தமக்கு கிடைக்கப்பெறவில்லை என புலனாய்வு அதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.

விசாரணை ஜனவரி 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### அம்பாறை

- ரி 56 மகசின் - 07
- ஐ. எம். ரவைகள் -200
- ஏ. கே. கோல்சர் - 02
- எஸ்.84-1ரகதுப்பாக்கி- 01
- எஸ். 84 மகசின் - 01
- 5 . 56 ரவை - 30
- சொட்கன் - 02

இதேவேளை, சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தாக்குதல் சம்பவம் பற்றி தெரிவிக்கையில்,

அம்பாறை மத்திய கந்த பொலிஸ் காவலரண்கள்மீது

### அநுருத்த

பாதுகாப்பு நடவடிக்கைகள், ாரிசோதனை ,முகாம்கள் அமையவேண்டிய இடங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

### புலிகள்

தற்போதுள்ள சூழ்நிலையில் பொதுமக்கள் பெரும் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்நோக்கிவருகின்றனர். இந்நிலையைக் கருத்

### தற்காலிக

அவர் மேலும் தெரிவிக்கையில்: பாப்பரசரைத் தரிசிப்பதற்காக செல்லும் யாத்திரிகர்கள் நிரந்தரப் பாதை ஒன்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''சமூக மாற்றத்தின் கருவி பெண்கள் ''எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கொன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இணுவில் கலாஜோதி சன சமூக நிலையத்தில் இன்று பி. ப. 1-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் க. குகதாஸன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பல பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

# பேச்சுவார்த்தையின் பலனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளின்மூலம் தீர்க்க முடியும் எனக் கூறுகிறது. இதன் பலாபலனை பொறுத்திருந்து பார்க்க ஐ. தே. க. தீர்மானித்துள்ளது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

'லங்கா தீப' சிங்கள வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில், பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எம்மிடம் எக்கருத்துமே பெறப்படவில்லை. இந்த நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்திருந்தே நாம் பார்க்க இருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மிகுதி வினாத்தாள்கள் ஓரிரு தினங்களில் வரும்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. (சா/தர) பரீட்சைக்கான இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் இரண்டொரு தினங்களில் யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேருமென யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கென யாழ். கல்வித் திணைக்களத்தில் இருந்து ஒருவர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இப்பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. (பா, தி)

## பாண் உற்பத்தி பெருமளவு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நேற்று பிற்பகல் அநேகமான வெதுப்பகங்களில் வெதுப்பி (பாண்) உற்பத்தி செய்யப்படவில்லை என தெரியவருகிறது

இதனால் கடைகளில் மக்கள் பாணிற்காக வரிசையில் காத்திருந்ததை எமது செய்தியாளர் அவதானித்துள்ளனர்

மாவிற்கு குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே பாண் உற்பத்தி நேற்று சில வெதுப்பகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவாக இருந்ததாக தெரியவருகிறது.

தற்போது யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மாவு தட்டுப்பாட்டை நிவர்த்திக்குமண கப்பல் திருமலையில் இருந்து ஒரு தொகுதி மாவை எடுத்துவர சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)(நி)

## ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்; இரகசிய பொலிஸ் விசாரணை

### ஜனாதிபதி செயலகம் நோக்கி செல்லத் திட்டம்

(கொழும்பு)

பிரான்ஸ் லங்கா நிறுவனத்தைச் சேர்ந்த 800 ஊழியர்கள் இரத்மலானையில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரை நடைபவனியாக வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் மகஜர் ஒன்றை இன்று கையளிக்கவுள்ளனர். இதை ஜனாதிபதியின் கையில் நேரடியாக கையளிக்க உள்ளனர்.

நேற்று வரை இவர்களை சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் இரகசிய பொலிசாரும் துருவித் துருவி விசாரணை செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பவனியை தீய சக்திகள் குழப்புவதற்கு முற்படலாம் எனவும் கருதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ்ஊழியர்களின் நலன்கள் தொடர்பாக தொழில்ஆணையாளருடன் ஊழியர்கள் நான்கு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன. இவற்றில் பலன் கிடைக்காததினால் தாம் இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சீனி இறக்குமதி

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் சீனியையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## லொறியில் மறைத்து வந்த பற்றரிகள் படையினர் பறிப்பு

(வவுனியா)

லொறியொன்றில் வடபகுதிக்கு மறைத்து எடுத்துவரப்பட்ட சுமார் 2800பென்ரோச் பற்றரிகளும் மோட்டார் சைக்கிள் பற்றரிகளும் தாண்டிக்குளத்திற்கப்பால் படையினரின் சோதனையின் போது சிக்கின.

ஈரற்பெரிய குளம் தடைமுகாமில்சோதனை முடித்துபுறப்பட்ட இந்த லொறியை கொக்குவெளியில் திடீரென மறித்து படையினர் சோதனையிட்டு பற்றரிகளை எடுத்தனர். லொறி சாரதியும் கிளினரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்,

## அரசாங்க எம்.பிக்களுக்கு 500 வேலைவாய்ப்பு படிவம்

பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ... விநியோகிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இப்

## மரண அறிவித்தல்கள்

### குமாரு இராசையா

(சித்தங்கேணி)

குமாரு இராசையா அவர்கள் 03-12-1994 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சிவநாயகம் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி கனகசபை மனோன்மணி, காலஞ்சென்ற துரைராசா (மட்டக்களப்பு) 29-11-1994 இல் காலஞ்சென்ற கணேசபிள்ளை (சிவம்), கனகரத்தினம் (சரஸ்வதி ஸ்ரோர்ஸ் மாங்குளம்), இராசதுரை கோடைக்காடு அராலி, தங்கராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விசுவலிங்கம், கனகசபை, திருமதி துரைராசா ஞானாம்பிகை, கனகரத்தினம் சரஸ்வதி, இராசதுரை, தவமணிதேவி, தங்கராசா பிரேமிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், சண்முகராசா (ரவி) பார்றின்) அபிராமி, பிரியங்கா, டிலானி, ஸ்ரீமாலினி, ஸ்ரீமயூரன், தர்சிகா ஆகியோரின் அன்பு பாட்டனும், திருமதி மாசிலாமணி நேசம்மா, பொன்னையா நல்லையா, பொன்னையா சின்னத்துரை, திருமதி அழகரத்தினம் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஃ சொட்கன் - 02

இதேவேளை, சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தாக்குதல் சம்பவம் பற்றி தெரிவிக்கையில்,

அம்பாறை மத்தியகந்த பொலிஸ் காவலரண்கள்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலிசாரும் ஒரு ஊர்காவல் படைசிப்பாயும் கொல்லப்பட்டதாக தெரிவித்திருந்தன. இச்சம்பவத்தில் ஒரு பொலிசாரைக் காணவில்லையென்றும் உயிரிழந்தவர் சப்சார்ஜன்ட் தரத்திலுள்ளவர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

### புலிகள்

தற்போதுள்ள சூழ்நிலையில் பொதுமக்கள் பெரும் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்நோக்கிவருகின்றனர். இந்நிலையைக் கருத்தில் கொண்டே விடுதலைப் புலிகள் இதற்கான சம்மதத்தினைத் தெரிவித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் சிறிலங்கா அரசு யாழ்ப்பாணத்து மக்கள் கொழும்பு செல்வதற்கு இதுவரை எவ்விதமான பாதை ஒழுங்குகளையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பா, தி, நி)

## புலமைப்பரிசில் பரீட்சையில் புளியங்குளம் இந்துக்கல்லூரி முதலிடம்

1994-ம் ஆண்டு, அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் வவு/புளியங்குளம் இந்துக்கல்லூரி மாணவி ஜெ. ஜெயந்தினி 157 புள்ளிகள் பெற்று வவுனியா மாவட்டம் நெடுங்கேணிக் கல்விக் கோட்டத்தில் முதலிடமும், வட தமிழீழத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் முதலிடமும் அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் போட்டியில் பேச்சு, கட்டுரை ஆகியவற்றில் இரண்டாம் இடமும், ஆங்கில மொழியறிவுப் போட்டியில், வாசிப்பு, கட்டுரை, ஆகியவற்றில் முதலாம் இடமும் நெடுங்கேணிக் கல்விக்கோட்ட மட்டத்தில் பெற்றமைக்காக எமது வாழ்த்துக்கள். (10319) - உறவினர்

## யாழ் வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

சினிமா நடிக நடிகைகளது படங்களைக் கொண்ட அனைத்து சிறிய பெரிய நாட்காட்டிகள் (கலண்டர்கள்) மற்றும் வாழ்த்து மடல்கள் யாவையும் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதையும், விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அவ்வாறான நாட்காட்டிகள், வாழ்த்து மடல்கள் அனைத்தும் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதையும் சகல வணிக நிலையங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி

யாழ் வணிகர் கழகம்
(சி-10859)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### தற்காலிக

அவர் மேலும் தெரிவிக்கையில்: பாப்பரசரைத் தரிசிப்பதற்காக செல்லும் யாத்திரிகர்கள் நிரந்தரப் பாதை ஒன்றினூடாகவே கொழும்பு சென்று வரவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். இடைப்பட்ட தேவை ஒன்றிற்காக தற்காலிகமாக ஒரு பாதையை திறப்பதை விரும்பவில்லை. இது ஓர் அரசியல் சார்ந்த பிரச்சினை. மிக அவதானமாகவே இந்த விவகாரம் கையாளப்படும் என நினைக்கிறேன்.

இராணுவத்தில் பலரும், தீவிர பௌத்தர்கள் பலரும் பாப்பரசரின் விஜயத்தை வெறுக்கின்றனர். விமர்சனம் செய்கின்றனர். இந்த நிலையில் இராணுவம்உள்ள பாதையால் கொழும்பில் எதுவித பாதுகாப்பும் அற்ற நிலையில் யாத்திரிகர்கள் பயணம் மேற்கொண்டால் சில குழப்பமான விளைவுகள் ஏற்படும் சாத்தியங்கள் உண்டு. இதைத் தவிர்ப்பது நல்லதல்லவா?

அண்மையில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கு இராணுவமே காரணம் என கருதப்படுகின்றது. இந்த வேளையில் இந்த யாத்திரை குழப்பமாக அமையக்கூடாது. இதனால் சமாதான நடவடிக்கைகள் மேலும் பாதிப்படைய நேரிடலாம், பின்தள்ளப்படலாம்.

யாத்திரிகர்கள் கொழும்பு செல்வதில் மூன்று பெரும் பிரச்சினைகள் உண்டு. ஒன்று போக்குவரத்து, அடுத்தது பாதுகாப்பு, மற்றது தங்குமிட வசதி.

அரசு இவை சம்பந்தமாக எதுவும் இன்னும் கூறவில்லை. பாதுகாப்புப்பற்றிக்கூட அரசு பேசவில்லை. இந்த நிலையில் பெருந்தொகையான யாத்திரிகர்களை அழைத்துச்செல்வது எப்படி?

தற்போதைய கிளாலிப் பாதையால் முடிந்தளவு யாத்திரிகர்கள் செல்ல முடியும் என நம்புகிறோம்.

(தி), (பா), (நி)

## 500 வேலைவாய்ப்பு படிவம்

பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலா 500 பேருக்கு அரசாங்க வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் தொழில், தொழில் பயிற்சி அமைச்சரால் இரகசியமாக விநியோகிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இப்படிவங்கள் விநியோகிக்கப்படுகின்ற போதும் இதுபற்றி எதிர்க்கட்சியினருக்கு குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவினருக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனக்கூறப்படுகிறது.

### பாப்பரசர்

நிறுத்தம் பாப்பாண்டவரின் வருகை காலப் பகுதியில் மட்டுமே கடைப்பிடிக்கப்படுமா? அல்லது இது தொடர்ந்தும் நீடிக்குமா?

பதில்: எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் - கூடிய விரைவில் சமாதான முயற்சியை மீண்டும் ஏற்படுத்தவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்புகின்றார். இதன் வழியாக பாப்பாண்டவரின் பயணத்தினை மையமாகக் கொண்டு இடைப்பட்ட குறுகிய காலப் பகுதியில் யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்தி - அதனூடாக சமாதானம் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகா எத்தனிப்பதாகத் தெரிகிறது. யுத்த நிறுத்தம் பாப்பாண்டவரின் வருகை காலப்பகுதிக்கு மட்டுமே வரையறை செய்யப்படமாட்டாது எனவும் கருதுகிறேன்.

கேள்வி விடுதலைப் புலிகள் தரப்பில் இது குறித்து ஏதாவது தெரிவிக்கப்பட்டதா?

பதில்: வவுனியாவினூடாக வரும் மக்கள் தெரிவிப்பதிலிருந்து விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகவே தெரிகிறது. ஆனால் அவர்கள் தமிழ் மக்களை இராணுவம் சோதனையிடுவதை விரும்பமாட்டார்கள். எனவே இந்நிலையில் இருதரப்பும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாமெனவும் கருதுகிறேன். இது ஒருபெரிய சர்ச்சைக்குரிய விடயமாகவும் நான் கருதவில்லை. இதனால் இரு தரப்பும் ஒரு தீர்வுக்கு வரலாம் எனக் கருதுகிறேன்.

### சுவீகரிப்பு

வவுனியா தச்சன்குளம் விமான நிலையம் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கென நம்பைக்குளம் மயானம், மகளிர் வித்தியாலய மைதானம் என்பன சுவீகரிக்கப்படவுள்ளது.

### ராணுவத்திற்கு

அரசியல் விமர்சகர் மேர்வின் டி சில்வா தனது சஞ்சிகை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்

புதிய அரசின் பாதுகாப்பு செலவினத்தில் ஊர்காவற் படையினரின் மேலதிகப் படி 55ரூபாவிலிருந்து 85 ரூபாவாகியுள்ளது. களத்தில் உள்ள படையினருக்கு நாளொன்றுக்கான மேலதிகப்படி பத்து ரூபாவினால் அதிகரித்துள்ளது.

புதிய அரசு தனது அதி முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பிற்கு அமெரிக்காவை விடுத்து இந்தியாவின் உதவியையே நாடுவதாகவும் மேர்வின் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

### கிளிநொச்சியில்

பான புள்ளி விபரங்களை பெற்றதின் பின்னர் இரண்டொரு தினங்களில் கிளாலியூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என தெரிவிக்கப்பட்டது. (பா, இ)

### வாழைச்சேனை

உதயகுமார் (ஒன்றரை மாதம்), காணாமற்போனோர் அ. தெய்வானை (61), சா. சோமன் (60), சி. செல்வராணி (20), சி. யோகம்மா (18), ஆ. தேவராசு (20), அ. இராஜகுமாரன் (02), இ. பகீரதன் (11), சி. உமா (10)

பார்றின்) அபிராமி, பிரியங்கா, டிலானி, ஸ்ரீமாலினி, ஸ்ரீமயூரன், தர்சிகா ஆகியோரின் அன்பு பாட்டனும், திருமதி மாசிலாமணி நேசம்மா, பொன்னையா நல்லையா, பொன்னையா சின்னத்துரை, திருமதி அழகரத்தினம் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07-12-91) புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கனகரத்தினம்
சரஸ்வதி ஸ்ரோர்ஸ்,
மாங்குளம்.
(10313)

## சிற்றம்பலம் திருச்செல்வம்

தோப்புக்காடு காரைநகரைச் சேர்ந்தவரும், தற்போது மாவடிச் சந்தி வட்டுக்கோட்டையில் வசிப்பவருமாகிய சிற்றம்பலம் திருச்செல்வம் (வெற்றிவேல்) நேற்று முன்தினம் மாலை காலமானார். அன்னார் அமரசிங்கம், விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசுந்தரத்தின் அன்புக் கணவரும், சந்திரசேகரம் (சுப்பிரமணியம் முன்னாள் 'சீநோர்' களஞ்சியப் பொறுப்பாளர்) விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), தர்மபூபதி (பிரான்ஸ்), விக்னராஜா (பிரான்ஸ்), யோகராணி (பிரான்ஸ்), சர்வேஸ்வரி, குணசேகரம் (நோர்வே), குணபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் தி. சிவலிங்கம் (கிராமசேவையாளர் பூநகரி), வத்சலா, விஜயலட்சுமி, தேன்மொழி (பிரான்ஸ்), சௌந்தரராஜன் (பிரான்ஸ்), சண்முகநாதன் (சவூதி அரேபியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 6-12-1994 நேற்று பி. ப. 2. 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தகவல்:
தி. சந்திரசேகரம்
(சுப்பிரமணியம்)
மகன்

மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை
(10314)

## திரு. வேலன் சின்னவன்

யாழ்ப்பாணம் மடம் வீதியைச் சேர்ந்த வேலன் சின்னவன் 6-12-94 நேற்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி. ப. 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்தங்கச்சி
(மனைவி)

மடம்வீதி,
யாழ்ப்பாணம். (10321)